
"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஆடி - ஆவணி - புரட்டாதி - 2025



## கம்போடியாவில் கந்தன்

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

# Satash Community Care






உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Adult Services 01708 850555**

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
**Children Services 01708 851189**

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
**Adult Services 01708 856592**

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
**Domicilary Care 0203 200 1047**

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com

மணி 33

# கலசம்
KALASAM

ஒலி 115

www.saivamunnettasangam.com Charity Registration No:292085

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

**விளம்பரம் நிருவாகம்**
சிவ தம்பு
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

**இலங்கைத் தொடர்பு**
வை சிவனருட்செல்வர்
**தொலைபேசி**
0766167547
**மின்னஞ்சல்**
svarul@yahoo.co.uk

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

# பண் படும் பாடும் பண்பாடும்

ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதை நடத்துபவர் ஒரு சிறுமியைத் தேவாரம் பாடச்சொல்கிறார். சிறுமி தேவாரம் பாடுகிறார். அவர் பாடிய தேவாரம் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்பது. இந்தத் தேவாரத்தின் பண் கௌசிகம்; பைரவி இராகம். ஆனால் அந்தப் பெண் பாடியதோ ஆபேரி ராகம். நன்றாகப் பாடியதால் திறமையுள்ள சிறுமி என்பதும் யாரோ சொல்லிக்கொடுத்திருக்கிறார்கள் என்பதும் தெளிவாகியது. ஆனால் சரியான பண்ணில் ஏன் பாடவில்லை என்று சிந்தித்தபோது பதில் கிடைத்தது. 1967 இல் வந்த ஒரு திரைப்படத்தில் பிரபலமான ஓர் இசையமைப்பாளர் இந்தத் தேவாரத்துக்கு இப்படி மெட்டமைத்திருந்தார்.

1985இல் வெளியான இன்னொரு திரைப்படத்தில் இன்னொரு பிரபலமான இசையமைப்பாளர் காம்போதி இராகத்தில் தியாகராஜசுவாமிகள் பாடிய "மரிமரி நின்னே" என்ற கீர்த்தனைக்குச் சாரமதி இராகத்தில் மெட்டமைத்திருந்தார். அந்தப் பாட்டை இப்போது பலரும் சாரமதியிலேயே பாடுகின்றனர். திரையிசையிலுள்ள மோகம் நம்மை அப்படி ஆக்கிவிட்டது. இசையமைப்பாளர்களைக் கடவுள்களாகக் கொண்டாடி அருளாளர்களுக்கு மேலே வைத்துவிட்டோம்.

தேவார மூவரான ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், தமிழிசை மூவரான முத்துத்தாண்டவர், அருணாசலக்கவி, மாரிமுத்தாபிள்ளை, சங்கீத மும்மூர்த்திகளான தியாகராஜர், தீட்சிதர், சியாமாசாஸ்திரி என்போரும் அவர்கள் போன்ற வேறு அருளாளர்களும் இறையருள் பெற்றவர்கள். அவர்கள் அருளிய பாடல்கள் இறையருளால் உதித்தவை. பாடும்போது அவர்கள் மனதிலே என்ன தோன்றியதோ, அதை அப்படியே பாடினார்கள்; பக்தியுடன் பாடினார்கள். அதனால் அந்தப் பாடல்களை அதே பண்ணில் பாடும்போதுதான் நமக்கும் மனதில் ஒரு சாந்தம், பக்தி ஏற்படும்.

மாற்றிப் பாடினால் என்ன? ஜனரஞ்சகமாக இருக்குமே! பாமர மக்களையும் போய்ச் சேருமே! என்று சில கேள்விகள் எழலாம். மக்களின் தரத்தை உயர்த்தவேண்டுமே தவிர, அருட்பாடல்களின் தரத்தைக் குறைப்பது சரியன்று. அருளாளர்கள் குறிப்பிட்ட பண்களில் - இராகங்களில் பாடியது இறையருளால் மட்டுமே. அதற்கு ஏதோ ஒரு காரணம் இருந்திருக்க வேண்டும். அதனால், அவற்றை மாற்றவோ சிதைக்கவோ நம்மில் யாருக்கும் உரிமை இல்லை. அதை மீறினால், பண் படும்: நமது பண்பாடும் படும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

**க ஜெகதீஸ்வரன்**
**ஆசிரியர்**

# இந்த இதழில்


| | |
|---|---|
| மூன்று நிலை | 03 |
| தாரைவார்த்துக் கொடுத்தல் - கந்தபுராணச் சிந்தனைகள் | 06 |
| தற்கால மக்களின் வாழ்வியலும் இந்து சமயத்தின்.... | 10 |
| கம்போடியாவில் கந்தன் | 16 |
| தேங்காய் | 19 |
| திருக்குறள் கதைகள் | 27 |
| நவக்கிரகங்கள் - பயணக் கட்டுரை | 30 |
| ஆவணிமாதச் சிறப்புக்கள் | 34 |
| Saiva School of Hinduism | 38 |
| பாஞ்சாலி சபதம் | 41 |


அட்டைப்படம்: ஞாலக்கோன், வடிவமைப்பு - குகன்

கலசம் இதழ் படித்தபின் அதை நண்பருக்கு அல்லது நூல்நிலையத்துக்குக் கொடுங்கள்

கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்

# மூன்று நிலை

## (அருட்பத்து)

திருமுருக கிருபாநந்தவாரியார்

**விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்று ஆன்மாக்களில் மூன்று வகை உண்டு. அவைகளின் நிலைக்கேற்ப இறைவன் முறையே சோதி வடிவாகத் தன்மையிலும், திருக்கோலம் தாங்கி முன்னிலையிலும், மானுட வடிவுடன் படர்க்கையிலும் அருள்புரிகின்றான். அந்த நீதி வழுவாத இறைவனின் இயல்பை எடுத்துரைக்கின்றது இக்கட்டுரை.**

இறைவன் மூன்று நிலையில் நின்று ஆன்மாக்களுக்கு அருள்புரிகின்றான். ஆன்மாக்களுக்கு ஏன் இறைவன் முத்திறம் நின்று அருள்புரிகின்றான் என்ற வினா எழும். ஆண்டவன் பட்சபாதம் இல்லாதவன். எல்லோருக்கும் ஒன்றுபோல் அருள்புரியவேண்டாமா? ஒருவருக்கு ஒன்று, மற்றொருவருக்கு ஒன்று என்று இருக்கக்கூடாதே! பலர் சேர்ந்து உணவு செய்கின்ற பந்தியில் ஒருவருக்கு நெய், ஒருவருக்குப் பாயசம், ஒருவருக்கு வெறும் அன்னம், என்று மாறுபடப் படைப்பது பிழையல்லவா? பந்தி மாறாட்டம் புரிவது பாவமும் ஆகும்.

கருணையும் நீதியும் நிறைந்த இறைவன் ஒரு உயிருக்கு ஒரு மாதிரியும் மற்றொரு உயிருக்க ஒரு மாதிரியும் அருள்புரியக்கூடாது அல்லவா? ஆனால், இறைவன் எல்லா உயிருக்கும் ஒன்றுபோல் அருள்புரிவதில்லை. இதனுடைய காரணத்தைச் சற்று நிதானமாகச் சிந்தித்தல் வேண்டும்.

**பக்குவத்துக்கேற்ற அருள்:**

ஒரு பெரிய கல்விச்சாலை. அதில் பல மாணவர்கள் படிக்கின்றனர். கல்விச்சாலையின் தலைமை ஆசிரியருக்கு எல்லாப் பிள்ளைகளும் ஒன்றுதானே. ஆனால் எல்லா மாணவர்களுக்கும் ஒன்றுபோல் “மார்க்” போடமாட்டார். ஒருவனுக்கு 100க்கு 90 மார்க், ஒருவனுக்கு 100க்கு 75 மார்க், ஒருவனுக்கு 100க்கு 25 மார்க். இப்படிப் பலமாதிரி மார்க் தருகின்றார். என்ன காரணம்? மாணவர்களிடத்திலே அவருக்கு அணுவளவும் வேற்றுமை கிடையாது. மாணவர்கள் படித்துச் சோதனையில் எழுதிய வண்ணத்தைப் பார்த்து அவரவர் அறிவுக்கேற்ப நடுநிலை நின்ற தலைமையாசிரியர் மார்க்குப் போடுகிறார்.

இதுபோல் இறைவன் அவரவர்கள் பரிபக்குவத்துக்கு ஏற்ப அருள் புரிகின்றான். அவ்வாறு அருள் புரிகின்ற நிலை மூன்று என அறிக.

**மூவகை ஆன்மா:**

இனி ஆன்மாக்களும் மூன்றுவகைப்படும். ஆன்மாக்களுக்கு வருகின்ற துன்பங்கள் அத்துணைக்கும் மூலகாரணங்கள் மலங்களேயாகும். இந்த உடம்புக்குப் பல நோய்களைத் தருவது மலச்சிக்கலேயாகும். அதுபோல் ஆன்மாவுக்கும் மலத்தொடர்பே சகல துக்கங்களுக்கும் காரணமாகும்.

ஆன்மாவுக்கு ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்கள் உண்டு. ஆணவம் ஆன்மாவுக்கு அநாதியாக உண்டு, அது மூல மலம் எனப்படும். சகஜ மலம் எனவும் கூறுவர். கன்ம மலமும் மாயா மலமும் இடையே வந்தவை. ஆகந்துவமலம் எனப்படும். ஒரு மலமுடைய ஆன்மாக்கள் “விஞ்ஞானகலர்”. இருமலமுடைய ஆன்மாக்கள் “பிரளயாகலர்”. மும்மலமுடைய ஆன்மாக்கள் “சகலர”.

ஒரு மலமுடைய விஞ்ஞானகலருக்கு இறைவன் சோதி வடிவாக உள்நின்று தன்மையில் அருள்புரிகின்றான்.

இருமலமுடைய பிரளயாகலருக்கு இறைவன் மான், மழு, காளகண்டம், சடைமுடி ஆகிய திருக்கோலம் தாங்கி முன்னிலையில் அருள்புரிகின்றான்.

மும்மலமுடைய சகலருக்கு இறைவன் “மானுடச் சட்டை” தாங்கிப் படர்க்கையில் நின்று அருள்புரிகின்றான்.

தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்று நிலையில் சோதி உருவம், மான் மழு தாங்கிய திருவுருவம், மானுட உருவம் என்ற இந்த மூன்று வடிவங்களில் நின்று அருள்புரிகின்றான் எனத் தெளிக!

இந்த அரிய கருத்தை நமக்கு எளிதாக உணர்த்துகின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.

“சோதியே சுடரே சூழொளி விளக்கே”

இது ஒருமலமுடைய விஞ்ஞானகலருக்கு அருளும் நிலை

“சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்”

இது இருமலமுடைய பிரளயாகலருக்கு அருளும் நிலை.

“பங்கயத்து அயனும் மால் அறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
நிறை மலர்க் குருந்த மேவிய சீர்
ஆதியே.....”

இது மும்மலமுடைய சகலருக்கு அருளும் நிலை.

“அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்றருளாயே”

அதெந்துவே - அதென்ன, இது கன்னட மொழி.

இறைவனே! அடியேன் அன்புடன் அழைத்தால் “அது என்ன” என்று கேட்டருள்புரிவீர்
இனி இந்தப் பாடலின் எழிலான முழு உருவம்.

சோதியே! சுடரே! சூழொளி விளக்கே!
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே! பரனே! பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனு மாலறியா
நீதியே! செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்த மேவியசீர்
ஆதியே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றருளாயே

“நீதியே!” என்று இறைவனை அழைக்கின்றார். இறைவன் நடுநிலை தவறாதவன், பட்சபாதம் இல்லாதவன் என்பதைக் குறிக்கிறார். மிகவும் அருமையான சொல் இது.

**நீதி நிறைந்தவன்:**

சுவாமிக்கு மிகவும் வேண்டியவர் சுந்தரமூர்த்தி நாயனார். அவர் தம்பிரான் தோழர். திரு வொற்றியூரிலே சங்கிலியாருக்குத் தந்த சத்தியத்தை மறந்து ஊரை விட்டுப்போக எண்ணி எல்லையதைத் தாண்டி ஒரு காலை வைத்தார். உடனே ஆண்டவன் இரு கண்களையும் வாங்கிவிட்டான். காலடி வைத்தவுடனேயே கண் கெட்டுவிட்டது. அந்த இடம் காலடிப்பேட்டை என்று இன்றும் வழங்கிவருகின்றது. தோழன் என்று இறைவன் மன்னிக்கவில்லை. குற்றம் புரியின் யாராயிருப்பினும் அதன் பயனைத் தந்தே தீருவான். ஆண்டவனே நீதி தவறாதவன்.

ஆகவே அடியார்கள் நீதி தவறாது ஒழுகவேண்டும். நீதியும், நெறியும், ஒழுக்கமும் அடியார்களுடைய உயிர் நாடிகள். இவற்றைக் கடைப்பிடித்தவர்கள் இறைவனுடைய அருளைப் பெற முடியும். இத்தகைய இனிய கருத்துக்களை நமக்குத் தெளிவாக எடுத்து உபதேசிக்கின்றது திருவாசகம்.

**நன்றி: திருவாசகத் தேன் 1959**

# நீதி தவறாதவன்

கொற்ற வாழி குவலயஞ் சூழ்ந்திடச்
சுற்று மன்னர் திறைகடை சூழ்ந்திடச்
செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மநுப்
பெற்ற நீதியும் தன்பெயர் ஆக்கினான். பாடல் எண் 100

“மநு”, “நீதி” ஆகிய இரண்டையும் சேர்த்துத் தன்பெயரை மநுநீதி என்று வைத்தான்

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங் கப்பெருமான் பாடல் எண் 130
- திருத்தொண்டர் புராணம்

# தாரைவார்த்துக் கொடுத்தல்

கந்தபுராணச் சிந்தனைகள்

Dr ச சிவலோகநாதன்

நாம் மிகவும் ஆசையோடும் அன்போடும் வைத்திருந்து பேணிப் பாதுகாத்த ஒரு பொருளை, இன்னொருவருடைய கையிலே தண்ணீர் வார்த்துக் கொடுத்தல் தாரைவார்த்துக் கொடுத்தல் எனப்படும். இந்த நீர் வரர்த்தலின் பொருள் என்னவென்றால், நாம் வார்த்துக் கொடுத்த பொருளுக்கும் எமக்குமிடையே உள்ள தொடர்பை அறவே வெட்டிக்கொண்டோமென்பதே! இந்த அடிப்படையிலேதான் “கைகழுவி விடுதல்” என்னும் “தாரைவார்த்துக் கொடுத்தல்” என்ற தொடருக்கு இணையான தொடரும், எல்லாத் தொடர்புகளையும் வெட்டிவிடுதல் என்ற கருத்துடன் சொல்லப்படுகிறது. சைவ சமயமுறைப்படி நடைபெறும் திருமணங்களிலே கன்னிகாதானம் ஒரு முக்கியமான கிரியையாகும். அப்பொழுது பெண்ணின் பெற்றோர் பெண்ணின் கரங்களை மாப்பிள்ளையின் கரங்களில் வைத்து நீர் வார்த்துப் பெண்ணை மாப்பிள்ளையிடம் ஒப்படைக்கின்றனர்.

கந்தபுராணத்திலே நான்கு திருமணங்கள் நடைபெறுகின்றன. வித்தியாசமான சூழ்நிலைகளில் நடந்தாலும் இந்த நான்கு திருமணங்களிலும் தாரைவார்த்துக் கொடுத்தல் ஒரு முக்கியமான கிரியையாக நடைபெற்றது. இது கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரமாகக் காட்டப்படுகிறது. இதன் காரணங்களை ஆராயுமுன் சம்பவங்களைப் பார்ப்போம்.

**பார்வதி திருமணம்:**

பார்வதி இமயமலை அரசனுக்கு மகளாக அவதரிக்கின்றாள். ஐந்து வயது அடைந்ததும் அவள் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்கின்றாள். சிவபெருமான் அவளுடைய தவத்தைக் காணச்சென்று அவளை ஆட்கொள்கின்றார். அதன்பிறகு திருமணம் பேசப்படுகிறது. சிவபெருமான் பார்வதிக்குக் கொடுத்த வாக்குப்படி கணங்கள் எல்லாம் சூழ்ந்துவர இமயமலை அரசனுடைய மண்டபத்துக்குச் சென்றார். அப்போது பார்வதி, இமயமலை அரசனுடைய அநுமதி யோடு துச்க்கை காவல் செய்ய, இந்திராணி அடப்பை ஏந்த, கங்கைகள் கவரி வீச, இலக்கு மியின் கையைப் பற்றிக்கொண்டு சபைக்கு வந்தாள். சபைக்கு வந்த பார்வதி சிவபெருமானை வணங்கினாள். வணங்கிய பார்வதியைச் சிவபெருமான் தமக்குச் சமீபமாக இருந்த ஆசனத்தில் அமர்த்தினார். இவ்வாறு பார்வதி வீற்றிருக்கும்போது, இமயமலை அரசனது அநுமதியின்படி அவனுடைய மனைவியாகிய மேனை மஞ்சள் நீரையும் சந்தனத்தையும் பிறவற்றையும் கொண்டுவந்தாள். வந்ததும், இமயமலை அரசன் தாழ்வாக அமர்ந்து மேனை கரத்திலிருந்து நீரை வார்க்கச் சிவபெருமான் திருவடிகளைக் கழுவிப் பூசை செய்தான். பிறகு உலகமாதாவான பார்வதியின் கையைப் பாசத்தின் தொடர்பு அற்ற தொன்மையான சிறப்புடைய சிவபெருமானின் கையினுள் வைத்து என் மகளை அன்போடு கொடுத்தேன் என்று கூறி, வேத மந்திரங்களைச் சொல்லி, சிவபெருமானை மருமகனாகப் பாவித்து நறுமணமுள்ள நல்ல நீரை வார்த்தான்.

பூசனை புரிந்த பின்னர்ப் புவனமீ஠ன் றாடன் கையைப்
பாசம தகன்ற தொல்சீர்ப் பரஞ்சுடர் கரத்துள் வைத்து
நேசமொ டளித்தேன் என்னா நெடுமறை மனுக்கள் கூறி
வாசநல் உதக முய்த்தான் மருகனென் றவனை உன்னி

திருக்கல்யாணப் படலம் 70

இதன்பிறகு சிவபெருமான் பார்வதியையும் அழைத்துக்கொண்டு கைலை மலைக்குச் சென்றார்.

**தெய்வயானை திருமணம்:**

சூரசங்காரத்துக்குப் பிறகு இந்திரன் தன்னுடைய மகளான தெய்வயானையை முருகப்பெருமானுக்குத் திருமணம் செய்துதர விரும்பினான். பிரம்மா, விட்டுணு தேவர்களையும் அழைத்துக்கொண்டு முருகப்பெருமானிடம் சென்று தன்னுடைய விருப்பத்தை விண்ணப்பித்தான். தெய்வயானை பூர்விகத்தில் தன்னை மணக்கத் தவம் செய்தவள் என்றும், அவளைத் திருமணஞ்செய்யத் தான் சம்மதம் என்றும் முருகப்பெருமான் தெரிவித்தார்.

இந்திரன் தேவர்கள், சூரிய சந்திரர், திக்குப் பாலகர்கள், முசுகுந்தச் சக்கரவர்த்தி எல்லோருக்கும் அழைப்பு அனுப்பினான். திருப்பரங்குன்றத்திலே கல்யாண சபை கூடியது. எல்லா உயிர்களும் மிகவும் சந்தோஷமாக அச்சபைக்குச் சென்றன. சிவபெருமானும் உமாதேவியாரும் சபைக்கு வந்தனர். தேவர் தலைவனான இந்திரன் முருகப்பெருமான் திருவடிகளை முதலிலே மனத்திலே பூசித்தான். பிறகு அத் திருவடிகளைச் செழுமையுடைய நீரால் முழுக்காட்டி, நிறைவாகச் சந்தனக் குழம்பைப் பூசி மலர் சாத்தி, அகிற்புகையூட்டி வணங்கினான். அதன்பிறகு இந்திரனானவன் முருகப்பெருமானுடைய கைகளிலே தெய்வயானை அம்மையாரைக் கொடுத்து "உங்களுடைய அடியவனாகிய யான் இவளை உங்களுக்குத் தந்தேன்" என்று சொல்லித் தாரைவார்த்துக் கொடுத்தான்.

அன்னுழி இந்திரன் ஆறு முகேசன்
தன்னொரு கையிடைத் தந்தி யைநல்கி
நின்னடி யேனிவண் நேர்ந்த னன்என்னாக்
கன்னல் உமிழ்ந்த கடிப்புனல் உய்த்தான்

தெய்வயானையம்மை திருமணப்படலம் 245

**தாட்சாயினி திருமணம்:**

பிரம்மதேவனின் மகனான தக்கன் பெருந்தவஞ்செய்து உமாதேவியார் தன் மகளாக வரவும், சிவபெருமான் அந்தணனாக வந்து அவரை வதுவை செய்யவும் வரம் பெறுகிறான். அதன்படி காளிந்தி நதியின் கண்ணே உமையம்மை ஒரு குழந்தையாகித் தக்கனிடம் சேர்கிறார். ஐந்து வயதுவரை தக்கனிடம் ஒரு குழந்தையாக வளர்ந்த உமையம்மை ஐந்து வயது முடிந்ததும் சிவனைக் குறித்துத் தவம் செய்கின்றாள். பன்னிரண்டு வயதான உமையம்மையின் தவச்சாலை முன் பிரம்மசரிய அந்தணனாகச் சிவபெருமான் தோன்றுகிறார். தவச்சாலையின் காவற் பெண்களிடம் தான் அவர்களின் தலைவியைக் காண விரும்புவதாகச் சொல்கிறார். உமையம்மையின் அநுமதியின் பேரில் அவர்கள் சிவபெருமானை உமையம்மையிடம் அழைத்துச் செல்கின்றனர். அந்தணர் உமையம்மையாரிடம், "பெண்ணே! யாம் இந்த இடத்துக்கு வந்தது ஒன்றைப் பெறுவதற்காகும். நீ அதைத் தருவாயானால் எம்முடைய விருப்பத்தைச் சொல்வோம்" என்று கூறினார். அதற்குப் பதிலாக, "என்னால் முடிந்ததைக் கேட்பீர்களானால் உங்கள் எண்ணம் கைகூடும்" என்று உமையம்மை கூறினார். உடனே அந்தணர், "உன்னைத் திருமணம் செய்துகொள்ளவே வந்தோம். அதுவே நீ எனக்கு அருளவேண்டியதாகும்" எனக் கூறினார். உமையம்மை மறுத்துச் சினந்தாள். அந்தணர் அவருக்கு மாத்திரம் தெரியும்படி தன்னுடைய உண்மைக் கோலத்தைக் காட்டினார். உமையம்மை தன்னிலை மறந்து அவரைப் போற்றித் துதித்தார். நின்ற தோழியர்கள் நிகழ்ந்தவற்றை ஓடிப்போய்த் தக்கனிடம் கூறினார்கள். நிகழ்ந்தவற்றை ஞானத்தால் உணர்ந்த தக்கன் பெருமகிழ்ச்சி அடைந்தான். நகரை அலங்கரித்தான்.

தேவர்களுக்கெல்லாம் அழைப்பு அனுப்பினான். அவன் சிவபெருமானை அடைந்து, "தாங்கள் வந்து திருமணம் செய்யவேண்டும் என்ற விருப்பத்தால் என் மகள் தவம் செய்தாள். ஆதலால் என்னுடைய நகரத்துக்கு வந்து அவளைத் திருமணஞ்செய்யவேண்டும்" என்று வேண்டினான். அவ்வாறே சிவபெருமான் தக்கனுடைய மாளிகைக்குச் சென்றார். உமையம்மையின் தாயாகிய வேதவல்லி அவரை நீராட்டி அலங்கரித்தாள். அதன்பிறகு உமையம்மையை அழைத்து வந்து சிவபெருமானின் அருகே அமரச்செய்தாள். தேவர்கள், கணங்கள் எல்லோரும் சூழ்ந்து நின்றனர். முகூர்த்தகால எல்லை வந்ததும் மனைவியான வேதவல்லி நீரை முறையாக வார்க்கத் தக்கன் சிவபெருமானுடைய காலைக் கழுவினான். அதன்பிறகு மலர் முதலியவற்றால் அன்புடன் பூசை செய்தான். ஞான வடிவினராகிய சிவபெருமானின் கைகளில் உமையம்மையாரின் கைகளை வைத்துத் "தங்களுக்கு இப் பெண்ணை யான் அளித்தேன். இவளை நன்கு பாதுகாக்கவேண்டும்" என்று பொன்கரத்தால் நீரை வார்த்துத் தத்தம் செய்தான்.

சிற்கென வடிவினன் செங்கை யுள்உமை
நற்கரம் நல்குபு நன்று போற்றுதி
நிற்கிவள் தன்னையான் நேர்ந்த னன்எனாப்
பொற்கர கந்தரு புனலோ டீந்தனன்

*திருமணப்படலம் 18*

இதன் பிறகு திருமால் பிரம்மன் ஆகியோர் வேத முறைப்படி திருமணத்தை நிறைவேற்றினர்.

**வள்ளியம்மை திருமணம்:**

திருமால் ஒருமுறை பாற்கடலிலே பள்ளிகொள்ளும்போது சிவபெருமானின் ஆடலழகை நினைவுகூர்ந்தார். அவருடைய கண்களிலேயிருந்து ஆனந்தக் கண்ணீர் வந்தது. அது அமுதவல்லி, சுந்தரவவல்வி என்று இரண்டு பெண்குழந்தைகளாக வளர்ந்தது. அமுதவல்லியும் சுந்தரவல்லியும் முருகப்பெருமானைத் திருமணம் செய்யவேண்டித் தவம் செய்தனர். அவர்கள்முன் தோன்றிய முருகப்பெருமான் அமுதவல்லியை இந்திரனிடமும் சுந்தரவல்லியை நம்பிராசனிடமும் வளரும்படியும், அவர்களைத் தாம் திருமணம் செய்வதாகவும் அருள்புரிகிறார். அதன்படி அமுதவல்லி தெய்வயானையாக இந்திரனிடம் வளர்ந்தார். சுந்தரவல்லி வள்ளி என்ற பெயரோடு வேடுவன் தலைவனான நம்பிராசனிடம் வளர்கிறார். வள்ளிநாயகியாரை முருகப்பெருமான் களவொழுக்கத்திலேயே திருமணம் செய்கிறார். தினைப் புனத்தைக் காவல் செய்துகொண்டிருந்த வள்ளி நாயகியாரை முருகப்பெருமான் அடைகிறார். பலத்த முயற்சியின் பின் அவருக்கு வள்ளி நாயகியாரின் காதல் கிடைக்கிறது. தினை முற்றிவிட அறுவடை தொடங்குகின்றது. வள்ளி நாயகியார் வீட்டுக்கு அனுப்பப்படுகிறாள். முருகப்பெருமான் அவரைத் தேடி அலைகிறார். கடைசியாக நம்பிராசனின் இருப்பிடத்துக்கு இரவிலே போய்ச் சேருகிறார். தோழியின் துணையுடன் இரவோடிரவாக வள்ளிநாயகியாரை அழைத்துக்கொண்டு போய் அருகேயிருந்த சோலையிலே தங்குகிறார். விடிந்ததும் வள்ளிநாயகியாரைக் காணாத வேடர்கள் போர்க்கோலம் பூண்டு முருகப்பெருமானைத் தாக்குகிறார்கள். வள்ளிநாயகியாருக்கு வேடர்கள்மீது கோபம் ஏற்படுகிறது. அவர்களைத் தாக்கும்படி வேண்டுகிறார். முருகப்பெருமான் சேவலைப் பார்க்கிறார். சேவல் சிறகடித்துக் கூவுகிறது. வேடர்கள் இறந்து வீழ்கின்றனர். பின்னர் முருகப்பெருமானின் ஏவுதலில் வள்ளிநாயகியார் அவர்களை உயிர்பெறச் செய்கிறார். வேடர்கள் முருகப்பெருமானின் அருளால் மனம் மாறுகிறார்கள். முருகப்பெருமானைத் தம்முடைய ஊருக்கு வந்து முறைப்படி திருமணம் செய்துகொண்டு போகுமாறு வேண்டுகிறார்கள். முருகன் உடன்பட்டு வேடுவர்

குறிச்சியை அடைந்து வேடுவர் தலைவனான நம்பிராசனின் திருமனையிலே எழுந்தருளினார். அச்சமயத்திலே அன்புடைய வேடுவ மன்னனான நம்பி என்பவன் முருகப்பெருமானின் திருக்கையில் கன்னியான வள்ளிநாயகின் கையை வைத்து “எம் தவத்தால் எம்மிடம் வளர்ந்த எம் மகளை விருப்புடன் இப்போது தங்களுக்குத் தந்தேன். ஏற்றுக்கொள்க!” என்று வேண்டி நீர்கொண்டு தாரைவார்த்தலான கன்னிகாதானத்தைச் செய்தான்.

அந்தநல் வேலை தன்னில் அன்புடைக் குறவர் கோமான்
கந்தவேள் பாணி தன்னில் கன்னிகை கரத்தை நல்கி
நந்தவ மாகிவந்த நங்கையை நயப்பால் இன்று
தந்தனன் கொள்க வென்று தண்புனல் தாரை உய்த்தான்

வள்ளியம்மை திருமணப் படலம் *199*

இவ்வாறாக நான்கு திருமணங்களிலும் முக்கியமாகக் காட்டப்பட்ட தாரைவார்த்தல் ஏன் முக்கியமானது என நோக்குவோம். இவ்வாறு தாரைவார்த்துத் தொடர்புகளையெல்லாம் பெண்பகுதியினர் வெட்டாவிட்டால் அப்பெண்ணுக்கு இரண்டு தலைமைகளின் கீழ், தாய் தந்தையரின் தலைமையின் கீழும், கணவனின் தலைமையின் கீழும் வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இவையிரண்டும் நூற்றுக்கு நூறுவீதம் ஒத்துப்போவதில்லை. அவ்வாறாயின் வேற்றுமைகள் வரும் இடங்களிலெல்லாம் யாரோ ஒரு பகுதியினரின் கொள்கைகளை அமுல்படுத்த முடியாமற்போகும். பெரும்பாலும் புதிதாக வந்த கணவரின் கொள்கைகளே அமுலுக்கு வராது போகும். இதனால் கணவன் மனைவியருக்கிடையே வேற்றுமை உண்டாகிக் குடும்பம் பிளவுபட்டுப்போகும். இதனாலேயே தாரைவார்த்துக் கொடுத்தலை கந்தபுராணம் திருமணத்தின் ஒரு முக்கிய பகுதியாகக் காட்டுகின்றது. இதனாலேயே பரஸ்பர அன்பு ஸ்திரமடைகிறது. கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரம் இதைச் சொல்லாநிற்கின்றது.



# தற்கால மக்களின் வாழ்வியலும் இந்து சமயத்தின் போக்குகளும்

ஸ்ரீ. நதிபரன் - நல்லூர்

பொதுநிலையில் சமயம் என்பது “சமை” என்ற வேரடியிலிருந்து முகிழ்த்த பதமாகும். சமைத்தல் என்பது பதப்படுத்தல் அல்லது வளப்படுத்தல் என்ற பொருள் தாங்கி வருகிறது. சாதாரண நிலையில் கணத்திற்கு கணம் மனித மனங்களிலிருந்து கிளர்ந் தெழுகின்ற எண்ணற்ற எண்ணங்களானவை நமது வாழ்வியலை சவாலுக்குட்படுத்தி வருகின்றன. இவ்வகையில் மேலெழும் எண்ண வகையறாக்களை செயல்நிலை அடிப்படையில் இரு வகைகளில் பிரித்துப் பார்க்கலாம். அவை நேர்முனைப்புடையவை, மற்றையது எதிர் முனைப்புடையவை. எளிமையான வகையில் கூறின் நல்லெண்ணங்கள், தீயஎண்ணங்கள் என்பவையே அவையாகும். எண்ணங்களே சொற்களாகவும் செயல்கள் ஆகவும் பரிணமிக்கின்றன. இம்மூன்றும் ஒன்றுக்கொன்று சார்பு நிலைத்தன்மையுடையவை. நமது செயல்களைத் தீர்மானிக்கும் கருவியான மனத்தினைப் பக்குவப்படுத்தி, இறைநிலையில் நிற்பதற்குரியதான பொறிமுறைகளை எடுத்துரைக்கும் தத்துவப்பரப்பாக இந்து சமயமானது திகழ்கின்றது. மனிதனது பொதுப்புத்தியில் இந்துசமயம் என்பது வெறுமனே வழிபாட்டு மரபாகவே கருதப்பட்டு வருவதனால் இதற்குள் அமிழ்ந்திருக்கக்கூடிய ஆழ்ந்த தத்துவ விசாரங்களை உணர்ந்து கொள்ளக்கூடியதான சிற்றறிவு நம்மிடமில்லை என்பதே உண்மை. அக்கால அநுபூதிமான் களான மெய்ஞ்ஞானிகளது நுண்மாண் நுழை புலத்தினால் உலகிற்கு உவந்தளிக்கப்பட்ட பல்லரிய ஞான நூல்களில், சூட்சுமமாக பொதிந்துள்ள உட்கருத்துக்களில் பிரதி பலிக்கப்படுகின்ற தத்துவப் பொருண்மைக ளானவை தற்கால விஞ்ஞானிகளே கண்டு வியக்கும் அளவுக்கு அரும்பெரும் பொக்கிஷங்களாக அமைகின்றன.

உலகிலுள்ள எல்லாப் பிறப்புக்களையும்விட மனிதப் பிறப்பானது மகத்துவம் நிறைந்தது. மற்றைய பிறப்புக்களுக்கில்லாத தனிச்சிறப்பு மனிதப்பிறப்பிற்கு உரியதாயிருப்பதற்கான காரணம் மனிதப் பிறவி ஒன்றே ஆன்மாவின் இறுதி இலட்சியமான முக்திநிலையை எய்துவதற்கு, அதாவது மீண்டும் பிறவா நிலையை அடைவதற்கான பிறப்பாகும். ஆனால் மண்ணுலகத்தில் நாம் இப்பிறவி எடுத்ததற்குரிய நோக்கத்தை மறந்து பொருளீட்டும் முனைப்பிலும் பணம் பதவிகளுக்காக அலைந்தும் அவமாகவே இப்பிறப்பைக் கழித்து வருகிறோம் என்பதே நிதர்சனமாகும்.

வேதாந்தங்கள், சைவ சித்தாந்தங்கள், பகவத்கீதை, திருமுறைகள், திருமந்திரம் போன்ற எண்ணற்ற சித்தர் பெருமக்களின் பாடல்கள் முதலிய பல்வேறு இந்து தத்துவ நூல்களிலும் இது குறித்த கருத்துக்களைப் பரக்கக் காணலாம். இவை பற்றியெல்லாம் நாம் அதிகமாக, ஆழமாகச் சிந்திக்க முற்படு வதில்லை. மாறாக ஆலய வழிபாட்டுடன் மட்டும் எமது ஆன்மிக வாழ்க்கை முறையை முடித்துக்கொள்கிறோம். உண்மையில் இந்து தத்துவங்களுக்குள் இருக்கின்ற ஆழ்ந்த தத்துவ உட்பொருள்கள், வாழ்வியல் நடைமுறைகள் எல்லாம் அர்த்தமுடையவை; அற்புதமானவை. இன்று எத்தனை பேருக்கு சைவத் திருமுறை களைச் சரிவர ஓதக்கூடிய ஆற்றல் காணப்படுகின்றது. முன்னர் சிறு வயதினரிடையே சைவத்திருமுறைகளை மனனம் செய்து பிழைகளின்றி ஒப்புவிக்கக்கூடிய ஆற்றல் அதிகமாக காணப்பட்டமை கண்கூடு. அக்காலத்தில் கல்விச்சாலைகளில் மாணவர்களது திறமை களுக்குக் களம் அமைத்து, போட்டிப்

பரீட்சைகள் நடாத்தி, பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டமை போன்று தற்காலத்தில் அவ்வாறான நிலைமை குறைவென்றே கூறலாம்.

மக்களின் வழிபாட்டு முறைகளுள் ஆலய வழிபாடு முதன்மை பெறுகின்றது. மக்களது வாழ்வியலுடன் நேரடித் தொடர்புபட்டதும் ஆன்மிக முன்னேற்றத்திற்குரிய சாதனமாக விளங்கும் ஆலயங்கள், தற்போது அவற்றின் செயற்பாடுகள், நோக்கங்களிலிருந்து வழுவி நழுவிச் செல்கின்றமை துரதிஷ்டமானது. இவை பெரும்பாலும் வருமானமீட்டுதலையே குறியாகக் கொண்டு செயற்பட்டு வருவதனால் அவற்றின் மையஇலக்குகள் அடிபட்டுப் போயுள்ளன. நடைபெற்றுவரும் பெரும்பாலான ஆலய திருவிழாக்களை அவதானிக்கையில் மக்களிடத்தே பக்தியுணர்வை காண முடியவில்லை. மாறாக, பொழுதுபோக்குக்கான களியாட்ட நிகழ்வுகளாகவே நடத்தப்படுவ தனையும் பார்க்க முடிகின்றது. பணமீட்டலை மையமாகக்கொண்ட கோயில் நிர்வாகங்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் பெரும்பாலான ஆலயங்களில் நிர்வாக ரீதியான பல்வேறு குழப்பங்கள், பிரசினைகள் தலைதூக்கி நீதிமன்றங்களிலும் வழக்குகள் நிரம்பி வருவதனையும் அவதானிக்க முடிகிறது. அத்துடன் பெரும்பாலான கோயில் பூசகர்களும்கூட அவர்களுக்குரித்தான கடமை களைச் சரிவரச் செய்வதனை மறந்து, அதாவது ஆலயக் கிரியைகளை ஆற்றுகையில் விதி முறைகளை தெரிந்தோ தெரியாமலோ புறம்தள்ளிப் பணமீட்டலை மட்டும் குறியா கக்கொண்டு செயற்படுவது கவலைக்குரிய விடயமாகும். புராண இதிகாசங்கள் கூறுகின்ற கருத்தியலின் படி, கலியுகத்தில் மக்களும் பிராமணர்களும் எப்படி வாழ்வார்கள்? எப்படி யிருப்பார்கள்? அவர்களது குணவியல்புகள் என்னென்ன? என்பவை பற்றியெல்லாம் தெளிவாக அலசப்பட்டிருக்கின்றது. கால மாற்றத்தின் படியே இவ்வாறெல்லாம் நடை பெறுகின்றதோவென எண்ணத்தோன்றுகின்றது. எனவேதான் இத்தன்மையான இழிநிலைகள் குறித்தெல்லாம் நாம் எவர்மீதும் குற்றம்காண விளைவது அபத்தமாகும். எல்லாமே காலம் செய்த கோலமே என்றெண்ணி வாளாதிருப்பதனைத் தவிர வேறு வழியில்லை.

### மதமாற்றத்தால் சைவசமயம் படும்பாடு

சமகாலத்தில் “மதமாற்றம்” என்ற கொடு நோயானது நம் தமிழ் சமுகத்தில் ஆழப் புரை யோடி, பீடித்து வருகின்றது. இதற்கு பலிக் கடாவாகும் சமயங்களுள் இந்து சமயம் முதன்மை பெறுகின்றது. இங்கு மதம், சமயம் என்ற இருவேறு பதப்பிரிவுகள் வெளிப்படுத்தி நிற்கும் உட்பொருண்மைகள் வெவ்வேறான வையாகும். உண்மையில் சமயமானது மனங்களைச் சீரமைத்து - பக்குவப்படுத்தி - ஒன்றிணைக்கும் மார்க்கமாகவே விளங்க வேண்டுமே ஒழிய சீரழிப்பதாக இருக்கக்கூடாது. சமயம் என்பதன் பதவிளக்கமும் அவ்வாறே உள்ளது. ஆனால் மதம் என்பது சமயம் குறித்து நிற்பதான பொருட்தத்துவத்திற்கு முரணான அர்தப் படுத்தலையே வெளிப்படுத்தி நிற்கின்றது. மத உணர்வுகள் அதிகமாக அதிகமாக ஈற்றில் அது (மத) வெறியாகப் பரிணமிக்கிறது. இது மனித மனங்களில் இயல்பாகவே ஒட்டியிருக்கும் அகந்தைக் குணத்தை அதிகப்படுத்துவதாக அமைகிறது. அகம்பாவம் அதிகரிக்க அதிகரிக்க மக்கள் மத்தியில் காமம், குரோதம், கோபம், சூது, வஞ்சகம், போட்டி, பொறாமை முதலிய பல தீய குணவியல்புகளின் எழுகைகளையும் தடுக்க முடியாது. இவற்றின் எழுச்சி, சமய முரணிலைகளை தோற்றுவித்து ஈற்றில் சமூக-இன அழிவிற்கே வித்திடுகின்றது. எனவே சமய நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக எமது மனங்களில் அன்பை ஊற்றெடுக்கச் செய்தல் வேண்டும். இதனையே இந்து சமயமும் “அன்பே சிவம்” என வலியுறுத்திக் கூறுகிறது என்பதுடன் உலகில் விளங்கும் அனைத்து சமயங்களின் கருத்தியல் நிலைகளும் அவ்வாறுதான் உள்ளன.

சனாதன தர்மம் எனப் போற்றிச் சிறப்பிக்கப்படுகின்ற இந்து சமயம் தற்காலத்தில் வேற்று மதவெறியர்களின்

ஆக்கிரமிப்பிற்குள் சிக்கிச் சின்னாபின்னப்பட்டு வருகின்றமை துரதிஷ்டமானது. இதற்கு பல்வேறு காரணங்களைச் சுட்டியுரைக்க முடியும். முக்கியமாக இச்சமயத்தில் இருக்கின்ற எல்லையற்ற சுதந்திரத் தன்மையினைக் குறிப்பிடலாம். மற்றைய சமயப்பிரிவுகள் போலல்லாது நிறுவனமயப்பட்ட கட்டமைப்பு இந்து சமயத்தில் இல்லை என்றே கூறமுடியும். சமயம் சார்பாகத் தீர்மான மெடுக்கும் அதிகாரம் ஆற்றொழுங்கில் எவரிடமும் கையளிக்கப்படாமையைப் பெரும் குறைபாடாக குறிப்பிடலாம். ஆதியாய் அநா தியாக விளங்கும் இச்சமயத்திற்கு வழிபடுதலில் காணப்படும் தடையற்ற சுதந்திரத்தன்மையும், சமயத்தினை மாண்புறு நிலையில் பேணிப்பாதுகாக்க வல்ல சைவ ஆதீனங்கள் முதலிய சமய நிறுவனங்களின் எழுகை குறைவாக உள்ளமையும், இருப்பவைகளின் செயற்றிறனற்ற அதாவது சமய, சமூக பணிகளையாற்றுதலில் தமது பொறுப்பற்ற தன்மையதாக - வினைத்திறன் அற்றிருக்கின்றமையும், ஆறுமுகநாவலர் பெருமான் காலத்திற்கு பின்னர் துணிந்து கருத்துரைக்கும் அர்ப்பணிப்பான சமயவாதிகள் அருமையாக உள்ளமையும், இருப்பவர்கள்கூட பதவி, புகழ், பணத்திற்கு அடிமையாகும் நிலைமை காணப்படுகின்றமையும் இந்து சமயத்தின் பேண்தகு நிலையானது கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றது. இவ்வாறான குறை பாடுகள் களையப்படாதவரை வேற்று மதத்தவர்களின் உட்பிரவேசத்தினையும் யாராலுமே தடுக்க முடியாது என்பதே நிதர் சனமாகும்.

தற்காலத்தில் இந்து சமயம் புறச்சமய வாதிகளை விட அச்சமயம் சார்ந்தோர் களாலேயே அதிகம் பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றது. நமது சமயவாதிகள் மத்தியில் இருக்கக்கூடிய அக முரண்பாடுகள், உட்பகைகள், போட்டிகள் என்பவை உச்சமடைந்து வருகின்றமையால் வேற்று மதப்பிரிவினர்களின் பிரவேசம் தவிர்க்கப்பட முடியாத வகையில் அமைந்து விடுகிறது. இந்நிலைமையினால் சிதைவுற்று வருகின்ற சமயத்தினைத் தூக்கி நிறுத்திப் பேணவல்ல தன்னலமற்ற சமயப் பெரியோர்களின் அவசியத்தன்மை பெரிதும் உணரப்படுகின்றது. தமிழ்ச் சமூகத்தில் புரையோடியிருக்கின்ற மது, போதைப்பொருள் பயன்படுத்தல்கள், அதன் தொடர்ச்சியாக, நீட்சியடைகின்ற சமூக விரோத செயல்கள், கலாசாரச் சீரழிவுகள் என்பவற்றால் சமூகம் சீரழிவை சந்தித்து வருகிறது. அதுமாத்திரமன்றி, யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியானது தமிழினத்தின் இருப்பி யலானது சவால் நிறைந்ததாக காணப் படுகின்றது. இத்தகைய நிலைமையின் பின்னணியில் தான், வேற்று மதப்பிரிவினரின் இந்து சமயத்தவர்களுக்கெதிரான பிரசார நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. ஒரு சமூகம் நலிவுற்றிருக்கையில் அச் சமூகத்தின் மீட்சியில் ஆபத்பாந்தவர்களாக இருப்பவர்களின் கருத்துக்கள் இலகுவில் மக்களிடத்தில் சென்றடைந்து விடுகின்றன. பலவித சலுகைகளாலும் தந்திரம் மிக்க கருத்துக்களாலும் கவரப்பட்ட மக்களின் மன நிலைகளில் மாற்றம் ஏற்பட்டு, தாய்ச் சமயத்தை விட்டோடும் இழிநிலை காணப்படுகின்றது. எச் சமயமாயினும் தாய்ச்சமயத்தினை விட்டு பிற சமயங்களுக்கு மாறுவதனை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. சமகாலத்தில் மத வெறியில் ஊறித்திழைத்துள்ள வேற்று மதவாதிகளின் கோரப் பிடியில் அகப்பட்டு சிக்கித் தவிக்கும் இந்து சமயம், புல்லர்களின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகளினாலும் சலுகைகளால் மக்களைக் கவர்ந்திழுக்கும் இழி செயல்களாலும் அதன் இருப்பியலானது கேள்விக்குள்ளாக்கப்பட்டு வருவதனை உணர முடிகிறது. வறுமையின் கோரப்பிடியில் அகப்பட்டுழலும் பின்தங்கிய கிரமப்புற மக்கள், மதமாற்றிகளின் நயவஞ்சகத்தனமான பேச்சுக்களால் மதம் மாற்றப்படும் படலம் தொடர்ந்தவண்ணமே உள்ளது. இலங்கை அரசி யலமைப்பு சட்டவாக்கத்தில் மதமாற்றமானது தண்டனைக்குரிய குற்றமாக கொள்ளப் படுகின்றது. அதனை நடைமுறையில் செயல்வலுப்பெற வைப்பதற்கு, துறைசார்ந்த பெரியவர்களின் - சட்டவல்லுனர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வது மிகவும் இன்றியமையாததாகும்.

## சைவசமயத்தின் புனிதம் சிதைக்கப்படல்

மிகப்புராதனமானதும் பல்லரிய தத்துவவியற் கருவூலங்களை தன்னகத்தே கொண்டு சிறப்புற்று விளங்குகின்றதுமான இந்துமதத்தின் இருப்பியல் இன்று கேள்விக்குள்ளாகி அழிவின் விளிம்பில் நிற்கும் அவலநிலையை தடுத்து நிறுத்தவும், எதிர்காலத்தில் தொடராம லிருக்கவும் நம்மத்தியிருக்கக்கூடிய சமயப் பெரியோர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் விழித்தெழ வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். வீதிக்கு வீதி, சந்திக்குச் சந்தி பெருமெடுப்பில் ஆலயங்களைக்கட்டி கும்பா பிஷேகங்கள், திருவிழாக்கள் செய்வதால் மட்டும் சைவசமயம் வளர்ந்துவிடும் எனக் கருதுவது முட்டாள்தனமாகும். கால மாற்றத்திற்கேற்ப சிந்தித்து சமய மறு மலர்ச்சியை ஏற்படுத்தலுக்குரிய எத்தனங்களை எடுக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பு மிக்க பணியாக அமைகின்றது. ஆலயங்களில் சமய அனுஷ்டான விதிகள் எல்லாம் காற்றில் பறக்க, பணநிலை மட்டுமே முன்னிறுத்தப் படுகின்றது. சிவாசாரியர்கள் முதல் வழிபடவரும் பக்தர்கள் வரை ஆலயங்களை புனிதத்தன்மையான - ஆன்மாக்களை பக்குவப் படுத்துகின்ற - அமைதி பேணும் இடங்களாகக் கருதிச்செயற்படாதிருப்பது கவலை தருகின்ற - துரதிஷ்டவசமான விடயமாகும். தற்காலத்தில் பெரும்பாலான ஆலயங்களில் நடைபெறும் திருக்கூத்துக்களைப் பார்க்கும் போது கடந்த காலங்களில் வாழ்ந்து போந்த சைவத்தின் காவலர்களாக போற்றிச் சிறப்பிக்கப்படும் ஆறுமுகநாவலர் பெருமான் போன்ற சைவப்பெருவள்ளல்கள் இருந்திருந்தால் நிலைமை எப்படியிருக்கும்? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். அவர்களின் இரத்தம் கொதிக்காதா என்ன? ஆலய வழிபாட்டு மரபில் சைவ அநுட்டான விதிகளை அனுசரிக்க வேண்டியது முக்கியமானதாகும். கிரியைகளாற்றும் அந்தணர்கள் முதல் வழிபாடாற்றும் அடியவர்கள் ஈறாக சைவசமயிகள் அனைவரும் இத்தகைய விதிமுறைகளுக்கு விதிவிலக்கானவர்கள் அல்லர். ஆறுமுக நாவலரினால் நமக்கு யாத்தளிக்கப்பெற்ற “சைவ அநுட்டான விதி” என்கின்ற நூலானது சைவசமயிகள் அனைவரும் கடைப்பிடித் தொழுக வேண்டிய ஆசார முறைமைகளை விளக்கி நிற்கின்றது. ஆனால் இப்போது இந்நூலின்கண் உள்ள பெரும்பாலான விடயங்கள் நம்மவர்களால் கடைப்பிடிக்கப் படுவதில்லை என்ற யதார்த்தத்தையும் ஏற்றுத்தானாக வேண்டும்.

முன்னொருகாலத்தில் ஆலயங்கள் நீதி பரிபாலனத்தின் மையங்களாக இருந்திருக் கின்றமை பற்றிச் சமய நூல்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றன. அக்காலத்தில் மக்களுக்கு ஏற்பட்ட பல்வேறு பிரசினைகள்- பிணக்குகளை ஆலய முன்றலில் வைத்து தீர்த்துவைக்கப்பட்ட வரலாறு சம்பவங்களையும் பார்க்கிறோம். அவ்வளவுக்கு அக்கால மக்கள் ஆலயங்கள் மீதும் - கடவுளர்கள் மீதும் எல்லையற்ற பக்தியும் நம்பிக்கையும் கொண்டிருந்த காலமது. காலம் செல்லச் செல்ல பக்தி என்பது மக்கள் மனங்களில் கானல் நீராகி ஆலய வழிபாடென்பது வெறும் சடங்குகளாகிப் போயின. தற்போது பெரும்பாலான ஆலயங்களில் நிர்வாக ரீதியான முரண்பாடுகள், பிணக்குகள், ஊழல்கள் அதிகரித்து அவை தொடர்பான வழக்குகள் நீதிமன்ற நிலுவையில் நின்று இழுபடுவதானது நம் இனத்திற்கே பெரும் சாபக்கேடாக அமைகின்றது. இங்குள்ள பெரும்பாலான ஆலயங்களில் நிர்வாகங்கள் தெரிவு செய்யப்பட்டு நிர்வகிக்கப்படுவது மரபு. தற்காலத்தில் ஊழல்கள் மலிந்த, வினைத்திறனற்ற நிர்வாகங்களால் குழப்பங்கள்- குரோதங்கள் மேலெழுகை பெற்றுள்ள நிலையில் ஆலயங்களின் தடையற்ற இயங்கு நிலையானது கேள்விக்குள்ளாக்கப்பட்டு வருகின்றது. ஆலய கிரியைகள்- பூசை வழிபாடுகள் திருவிழாக்களே ஸ்தம்பித்துப் போகுமளவிற்கு நிர்வாக ரீதியான முரண்பாடுகள்- தலைதூக்கி வருகின்றமை கவலைக்குரியது. ஆலயங்களானவை அதிக வருவாய்களை ஈட்டிவரும் மையங்களாக விளங்குகின்றன. குறிப்பாக புலம் பெயர்ந்தவர்களால் இங்குள்ள ஆலயங்களில் மேற்கொள்ளப்படுகின்ற திருப்பணி வேலைகள்,

கும்பாபிஷேகங்கள், திருவிழாக்கள் போன்ற இன்னோரன்ன செலவுகளிற்கெனப் பெருமளவு பணத்தை ஆலய கஜானாக்களிற்கு அனுப்பி வருகின்றனர். இவற்றிற்குரிய சரியான கணக்கு விவரங்கள் உரியமுறையில் ஆலய நிர்வாகங்களால் காட்டப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்களைப் பரக்கக் காணலாம். ஆலய அங்கத்துவம் வகிப்பவர்கள் குறித்த பகுதியினரே இத்தகைய பணக்கையாடல்களை மேற்கொள்வதனால் குழப்பங்களும் குரோ தங்களும் கட்டவிழ்கின்றன.

ஆலயங்களானவை வெறுமனே சமய நிறுவனங்களாக மட்டுமல்லாமல் சமூக நன்நோக்கிலும் செயற்பட வேண்டியதன் அவசி யத்தன்மை உணரப்பட வேண்டியது அவசி யமாகும். இன்றைய காலகட்டத்தினை பொறுத்தவரை பொருண்மிய நெருக்கடியானது சமூகத்தினை அதலபாதாளத்திற்குள் தள்ளி விட்டுள்ளது. வறுமைப்பட்ட ஏழை மக்களின் துயர்களைவதற்கு அரச இயந்திரத்தினை மாத்திரம் நம்பியிராமல் ஆலயங்களை நிலைக்களனாகக்கொண்டு சமூகப் புரட்சியை மேற்கொள்ள வேண்டியதும் அவசியம். இதனால் மக்களின் வாழ்வாதாரம் மேம்படக்கூடிய சாத்தியமுண்டு. முக்கியமாகத் திருவிழாக் காலங்களில் மாத்திரமல்லாமல் அநுதினமும் மூன்று வேளைகளிலும் ஆலயங்களில் அன்னதானம் வழங்கும் நடைமுறை அமுல் படுத்தப்பட வேண்டும். “தனி ஒரு மனிதனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்” என்ற பாரதியின் கனவு மெய்ப்படக் காரியமாற்ற வேண்டும். மேலும் பாடசாலைகளிலிருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் ஏறுமுகமாகி வருவது சாதரணமாகி வருகின்றது. இதற்கான முக்கிய காரணம் பாடசாலை உபகரணங்களை கொள்வனவு செய்வதில் ஏற்படும் இடர்ப்பாடுகளேயாம். இதனை கருத்திற்கொண்டு வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்கு பலவிதங்களில் ஆலய நிர்வாகங்கள் தன்னளவிலான பங்களிப்பினை செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். வெறுமனே திருவிழாக்கள், குடமுழுக்கு, கும்பாபிஷேகங்கள் என்று வரும்போது தேவையற்ற ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துப் பல்வேறு சமூகநலத் திட்டங்களை ஆலய நிர்வாகங்கள் செய்ய முற்படின் மிகப்பெரிய சமூக அதிர்வை நிச்சயம் உணர முடியும்.

தற்போது தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் ஆலயங்களின் எண்ணிக்கைக்குப் பஞ்சமில்லை என்றளவிற்கு அதிகளவு இந்து ஆலயங்கள் சிறியளவிலும் சரி, பெரியளவிலும் சரி காணப்படினும் வழிபடாற்ற வரும் அடியவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சிப் போக்கினையே அவதானிக்க முடிகின்றது. இதற்கு பலவித காரணிகளை குறிப்பிட்டுக் கொண்டாலும் குறிப்பாக மக்கள் மத்தியில் ஆன்மிக நாட்டம் அருகிவருவதற்கு வறுமைப்பட்ட குடும்பப் பின்னணியும் ஒரு முகாந்திரமாகும். இந்நிலையில் நலிந்த பொருளாதாரப் பின்னணிகளைக் கொண்ட குடும்பங்களிற்கான பலவித மறுவாழ்வுத் திட்டங்களை ஆலயங்களை மையமாகக் கொண்டு அவர்களது தேவை அறிந்து அமுல் படுத்துகையில் மக்கள் மத்தியில் ஆலயங்கள் மீதான மதிப்பும் நம்பிக்கையும் பக்தி விசுவாசம் என்பனவும் பன்மடங்கு அதிகரிப்பதற்கு வழிசமைக்கும். அதாவது பூமாலைகட்டுதல், கோலமிடல் ஆலய உள்- வெளி பிரகாரங்களைத் துப்புரவு செய்தல், தோரணம் பின்னுதல், அலங்காரம் செய்தல், கலைகளை வளர்த்தல், பசுவளர்ப்பு, தேனி வளர்ப்பு முதலிய பலவிதமான திருப்பணி வேலைகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும்போது தொழிலற்றி ருப்பவர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எனவே ஆலயங்களைத் தனியே கிரியை நடைமுறை களுடன் மட்டுப்படுத்தாது இவ்வாறான பலவித சமூக நலத்திட்ட பணிகளை நன்நோக்கில் முன்னெடுக்க இங்குள்ள ஆலய பரிபாலனங்கள் தன்னலம் கருதாமல் பொது நலம் கருதிக் கவனம் செலுத்தினால் வருமான

ஏற்றத்தாழ்வுகளை இயன்றவரை குறைத்து வறுமைப்பட்ட குடும்பங்களது பொருளாதா நிலைகளை உயர்த்த முடியும். அத்துடன் ஆலய நிர்வாக ரீதியான பிணக்குகள் ஏதேனும் இருந்தால் தங்களுக்குள்ளேயே தீர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டுமே யொழிய நீதிமன்றங்களை நாடுவதும் பொதுவெளியில் அடிபிடிப்படுவதும் நம் சமயத்திற்கே பெரும் இழுக்கை ஏற்படுத்தும் என்பதையும் இந்துக்கள் வேற்று மதம் மாறிச்செல்வதற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தும் என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்திற்கொண்டு செயற்பட வேண்டும். அத்தோடு ஆலய அர்ச்சகர்களும் வருமானத்தினை மட்டும் குறியாக கொண்டு செயற்படாமல் பக்தர்களின் நலன் கருதி தங்கள் பணிகளை ஆலய விதிமுறை தவறாமல் செவ்வனே ஆற்ற முன்வர வேண்டியதும் அவசியமாகும். ஆலயம் என்பது ஆன்மாக்கள் லயிக்குமிடம். ஆண்டவனின் அருள் சுரக்குமிடம். அத்தகைய புனிதமான இடத்தினை களங்கமுறாது பாதுகாக்க வேண்டியது இந்துக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

# Whats App இல் வந்தது

ஒருவர்: ஐயர் சமஸ்கிருதத்தில் மந்திரம் சொல்கிறார், ஒன்றுமே புரியவில்லை!

மற்றவர்: நல்லது, உங்களுக்குத் தேவாரம் ஏதாவது அல்லது திருவாசகம் தெரியுமா?

ஒருவர்: தெரியாது!

மற்றவர்: நாலாயிரத் திவ்ய பிரபந்தம் என்றால் என்னவென்று தெரியுமா? இவற்றை யார் எப்போது பாடினார்கள் என்றாவது தெரியுமா?

ஒருவர்: தெரியாது! கடினமான கேள்விகளைக் கேட்டால் நான் எப்படிப் பதில் சொல்வது?

மற்றவர்: சரி, பெரியபுராணம் என்றொரு புத்தகம், தொண்டர்களைப்பற்றிச் சேக்கிழார் எழுதியது பார்த்துள்ளீர்களா?

ஒருவர்: இல்லை, சேக்கிழார் என்றால் யார்?

மற்றவர்: திருக்குறள் கேள்விப்பட்டதுண்டா? திருவள்ளுவரைத் தெரியுமா?

ஒருவர்: இல்லை. ஆனால் அவருக்குச் சிலை வைக்கிறோம் என்றார்கள்; போனேன்.

மற்றவர்: சில முக்கியமான கோயில்களிலே திருமுறைகளை முறையாகப் பாட ஓதுவார் என்றொருவரை நியமித்திருப்பார்கள். அவர்கள் என்ன மொழியிலே பாடுவார்கள் என்று தெரியுமா?

ஒருவர்: ஓதுவார் என்றால் யார்?

மற்றவர்: சைவம், வைணவம் என்றால் என்னவென்றாவது தெரியுமா?

ஒருவர்: எனக்குச் சைவம் அவ்வளவு பிடிக்காது; அசைவம் நல்லாச் சாப்பிடுவேன்.

மற்றவர்: கோயிலுக்குப் போய் கூட்டுப்பிரார்த்தனை பண்ணுவார்களே! அதிலே எப்போதாவது பாடியிருக்கிறீர்களா?

ஒருவர்: அந்தப் பக்கம் நான் தலைவைக்கிறதே இல்லை.

மற்றவர்: அப்படியென்றால், தமிழிலே பூசைபண்ணவேண்டும் என்ற ஆர்வம் எப்படி வந்தது.?

ஒருவர்: எல்லோரும் கூவுகிறார்கள், நானும் அவர்களுடன் சேர்ந்து கூவுகிறேன்; அவ்வளவுதான்.

# கம்போடியாவில் கந்தன்

ஞாலக்கோன்



நொம் பெங் (Phnom Penh) அருங்காட்சியகம்



விநாயகர்

நொம் பெங் (Phnom Penh) கம்போடியாவின் தலைநகரம். அங்கே ஒரு தேசிய அருங்காட்சியகம் உள்ளது. அந்த அருங்காட்சியகத்தில் பல சிலைகள்; இந்துக் கடவுள்களின் சிதைந்த சிலைகளைக் காட்சிப் படுத்தியுள்ளார்கள். இவை மிகச் சாதுர்யமாகத் திருடப்பட்டு வெளிநாடுகளில் விற்கப்பட்டவை. டக்லஸ் லச்போர்ட் (Douglas Latchford) என்பவர் மூலம் கடத்தப்பட்டு பெருந்தொகைப் பணத்துக்கு விற்கப்பட்டன. வெளிநாட்டு அருங்காட்சியகங்களும் கலைப்பொருள்கள் சேகரிக்கும் தனி நபர்களும் இவற்றை வாங்கியிருக்கின்றனர். 2019 இல் லச்போர்ட் பிடிபட்டார். ஆனால் வழக்கு நடக்குமுன் இறந்துவிட்டார். அவரின் மகள் ஜூலியா இவற்றைத் திருப்பி கம்போடியாவிடம் ஒப்படைத்துள்ளார். அந்தச் சிலைகளை இப்போது காட்சிப்படுத்தியுள்ளார்கள். அவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்.



கந்தன்

# Phnom Penh Museum, Cambodia

## Profile of an Art Dealer: Douglas Latchford (1936 - 2020)

Douglas Latchford's name has become synonymous with the looting of Khmer artefacts. A UK and Thai citizen and antiquities dealer, he led a network of looters, smugglers, brokers, conservators, dealers, and other experts that sold stolen antiquities to some of the world's most prestigious museums and art collectors for over fifty years.

To identify objects for potential sale, Latchford funded cameras for looters to photograph their findings. He also provided looters, "shopping list "of desired objects. For objects to enter the international art market. Latchford falsified provenance and shipping documents.

Latchford amassed enormous wealth and an extraordinary  antiquities collection through his illicit dealings. Many of the objects displayed here went through his network,

In 2019, Latchford was indicted by the US government for illicit trafficking . He died in2020 before he could be prosecuted. A month after his death, his daughter Julia, agreed to return his Khmer collection to Cambodia



திருமால்

**Courtesy: National Museum, Phnom Penh, Cambodia**

# Profile of Former Looter: Lion


From 1980 - 1997, an ex Khmer Rouge child soldier emerged in Cambodia as one of the most prolific temple looters. Code - named Lion, by the mid 1990s he led a gang of hundreds of looters. Many statues passed through a Cambodian broker, code - named Sleeping Giant, and then on to notorious leader Douglas Latchford.

To find artefacts, Lion and his gang traveled the country's remote temple sites, using metal detectors and metal rods to locate buried objects. Stone statues that were too large to be transported were broken into fragments and later repaired by conservators in the network. The looters were compensated a few hundred dollars in Thai Baht or with metal detector batteries or cows.

Near the end of his life, Lion provided extensive testimony on stolen artifacts, recalling in startling detail the location, position, and condition of objects he had found and how they were transported across the border.



தந்தைக்கு உபதேசம்



அம்பாள்



அர்த்தநாரீஸ்வரர்



சிவலிங்கம்

நன்றி: தேசிய அருங்காட்சியகம், நொம் பெங், கம்போடியா



# தேங்காய்

சைவத் தமிழ்க் கலாசாரத்தில் நாம் எந்த வேலையைத் தொடங்கினாலும், முதலில் ஒரு தேங்காயை உடைத்து, விநாயகரை வழிபட்டே தொடங்குகிறோம். தடைகள் ஏதுமின்றிச் சுபகாரியங்கள் நடைபெறவேண்டும்; தேங்காய் உடைத்து விநாயகரை வழிபட்டால் தடையின்றி நடக்கும் என்ற நம்பிக்கை பலருக்கும் உண்டு.

திருமணங்கள், கிருகப்பிரவேசம், வீடு கட்ட ஆரம்பித்தல் என்று எல்லாவிதமான நிகழ்வுகளிலும் இந்தத் தேங்காய் உடைத்தல் இருக்கும். குடும்ப நிகழ்வுகளில், வயதிற் பெரியவர்கள், தாய் மாமன் போன்ற நெருங்கிய உறவினர்களிடமே இந்தப் பொறுப்புக் கொடுக்கப்படும்.

கிராமங்களிலே யாராவது தொலைப் பயணம் போவதாக இருந்தால், போகுமுன் தங்கள் குலதெய்வத்தின் கோயில் வாசலுக்குச் சென்று (கோயில் பூட்டியிருந்தாலும்) வாசலில் தேங்காய் உடைத்து வழிபட்டே செல்வர்.

கோயில்களிலே அபிஷேகத்துக்கான கும்பங்கள் வைப்பதற்கும் வீட்டு மங்கல நிகழ்வுகளில் நிறைகுடம் வைப்பதற்கும், திருமணங்கள், கூட்டங்களில் வரவேற்பதற்கான நிறைகுடம் வைப்பதற்கும் தேங்காய் பயன்படுத்தப்படுகிறது. அதற்கு முடியுள்ள தேங்காயையே பயன்படுத்துவர். இந்தத் தேங்காயில் மஞ்சள் பூசி, சந்தனம், குங்குமம் முதலியவற்றால் பொட்டிட்டு வைத்தே பயன்படுத்துவர்.

தேங்காய் நமது தலையைக் குறிக்கின்றது. அதைச் சுற்றியுள்ள தும்பு நமது வாழ்க்கையிலுள்ள சிக்கல்களைக் குறிக்கிறதென்பர். இறைவனை வழிபடும்போது நமக்கு மன அமைதியும் புத்துணர்ச்சியும் கிடைக்கிறது. கோயிலிலே தேங்காயை உடைத்தவுடன் அதன் குடுமியை அகற்றுவர். நம்முடைய சிக்கல்கள் அகன்றன என்பதை இது குறிப்பால் உணர்த்துகின்றது.

தேங்காயின் வெளித்தோல் பச்சையாக இருக்கும். இது மாயாமலத்தைக் குறிக்கும். உள்ளே உள்ள தும்பு கன்ம மலத்தைக் குறிக்கும். ஓடு ஆணவ மலத்தைக் குறிக்கும். ஆக, மாயையை நீக்கி, அதன்பின் கன்மத்தையும் நீக்கி அழியாத ஆணவத்தை மட்டும் இறைசந்நிதியில் கொண்டுபோய் உடைத்தபின் உள்ளே உள்ள வெண்ணிறமான பருப்பு - திருவருள் நமக்குக் கிடைக்கும் என்ற சமய தத்துவத்தையே இந்தத் தேங்காய் உடைத்தல் நமக்குப் புரியவைக்கிறது.

முற்றாத தேங்காயிலுள்ள நீர், இளநீர், அபிஷேகத் திரவியங்களில் ஒன்றாகும். இளநீரினால் சுவாமிக்கு அபிஷேகம் செய்தால் நன்மக்கட்பேறு கிடைக்கும் என்று ஆன்றோர் சொல்வர். பிறந்த குழந்தையை முதன்முதல் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லும்போது ஒரு தென்னங்கன்றையும் கொண்டுபோய்க் கொடுக்கும் பழக்கம் சில ஊர்களில் உண்டு.

வலுவான சிறிய தேங்காய் ஒன்றுண்டு. இதைப் போர்த்தேங்காய் என்பர். சித்திரை வருடப்பிறப்பின் போது இந்தத் தேங்காயை வைத்துப் போர்த் தேங்காய் அடித்தல் என்ற விளையாட்டு நடைபெறுவதுண்டு. இப்போது காலம் மாறிவிட்டதால் இந்த விளையாட்டும் நின்றுபோயிருக்கலாம்.

தேர்த் திருவிழாக்களில், பயணம் போகுமுன், அன்றாடம் வழிபடும்போது என்றெல்லாம் கல்லிலே அடித்து உடைக்கப்படும் தேங்காயை, உடையும்போது அது சிதறுவதால், சிதறுதேங்காய் என்பர். இது கோயிலை அண்மித்திருக்கும் ஏழை மக்களுக்கு உணவாகப் பயன்படுகிறது. அது தவிர, இந்தத் தேங்காயைக் காயவைத்து, தேங்காய்நெய் ஆக்குவதற்கும் பயன்படுத்துவர்.

வெளிநாடுகளுக்கு வந்துவிட்டதால் இங்கு பிறந்து வளரும் பிள்ளைகளுக்கு சிதறுதேங்காய் பற்றியும் போர்த்தேங்காய் பற்றியும் தெரிய வாய்ப்பில்லை. தாய்நாட்டிலும் தற்போது கலாசாரம் மாறிவிட்டது.

ஆனால் எல்லா ஊர்களிலும் கோயில் அர்ச்சனைகள் செய்யும்போதும் முக்கிய மங்கல நிகழ்வுகளின்போதும் நற்கருமங்கள் தொடங்குமுன்னரும் இன்னும் இந்தத் தேங்காய் உடைக்கும் வழக்கம் மாறாமல் இருந்துவருகிறது.

தகவல்: இந்துமதம் என்ன சொல்கிறது - பாகம் 2
"மங்கலப் பொருள்களின் மகத்துவம்"
ஞானம் பதிப்பகம்




Banana Leaf
taste with tradition
WE CATER FOR
WEDDINGS, PUBERTY CEREMONIES,
BIRTHDAYS, ARANGETRAM & MORE
அனைத்து விழாக்களுக்கும் உணவு,
பலகார வகைகளும் செய்து
கொடுக்கப்படும்.
020 3689 2798
020 8554 4120
LFORD BRANCH - 96 Cranbrook Road, Ilford, Essex, IG1 4NH
NEWBURY PARK BRANCH - 4 Central Parade, Ley Street, Ilford, Essex, IG2 7DE
WWW.BANANALEAFUK.CO.UK
INFO@BANANALEAFUK.CO.UK
FOLLOW US
BANANA_LEAF.UK



சிவயோகம்

SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)



# இந்து கலாசார மையம்

## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

128, Aurelia Road, Croydon CRO 3BF. Tel: 020 8767 9881









சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் "சிவயோகம்" அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.

வங்கிக் கணக்கு விபரம் Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 | Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS

நன்றி

ஆலய நிர்வாகத்தினர்

Muththumari Amman Temple Sivayogam



"Ammanai Saran Addainthal Athika Varam Peralam"

**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org

## அம்பிகையின் திருவருளை பெற

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற முதியவர்களுக்கு

# அன்னதானம் செய்ய அரிய வாய்ப்பு




உங்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின் பிறந்தநாள், திருமணநாள், நினைவு நாள் மற்றும் உங்கள் இல்ல சிறப்பு விழா தினங்களில்

## அன்னதானம் செய்யலாம்...

உங்களின் £100 பங்களிப்பு

பல பேரின் வயிறு நிரம்பி மனம் குளிரும்....

இப்புனிதப் பணியில் கைகோர்க்கும் அடியவர்களுக்கு உதவுவதற்கு தாயாராக இருக்கின்றோம்.

(அன்னதானம் கொடுக்கும் நிகழ்வு தின புகைப்படம் மற்றும் காணொளி உங்களுக்கு கொடுக்கப்படும்)

**YOU CAN CONTRIBUTE FOOD**

**DONATION £100** NO ADMINISTRATION CHARGES

**to Orphanages or Elders Home in Sri Lanka**

on Your Birthday, Wedding Day

Remembrance Day

or Any Other Special Function




**We will be providing Photos & Video of the event to you**

**Bank Details: SKTA Temple Trust**

**LLOYDS BANK | SORT CODE: 30-98-91 | ACCOUNT NO: 06905358**

அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்

**Please donate as much as you can!**


J
SURYA JEWELLS
"உண்மை வெல்லும்"
நியாயமான வட்டி வீதத்தில்
தங்க நகைகள் அடகு பிடிக்கப்படும்
விதவிதமாய் வித்தியாசமான டிசைன்கள்
உங்கள் அழகிற்கு அழகூட்டிடும்
பழைய பவுண்களைக் கொடுத்து
புதிய நகைகளை வாங்கலாம்
அதுமட்டுமல்ல
நீங்கள் செய்யும் ஆடர்கள்
குறித்த நேரத்தில்
செய்து தருவதில் வல்லுநர்கள்
அதி குறைந்த வட்டி வீதத்தில்
வாரத்தில் 7 நாட்களும்
அடகு பிடிக்கப்படும். (2.5%)
மலிவான விலையில்
தரமான தங்கத்திற்கு
Eastham ல்
சூரியா ஜுவல்ஸ்
உங்கள் நகைகளை வேறு இடத்தில் கூடிய வட்டி வீதத்தில் அடகு வைத்திருந்தால்
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.
Tel: 020 8552 2224
292 High Street North, London E12 6SA

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட நாள்கள்

## ஜுலை (28-07-2025) தொடக்கம் ஒக்டோபர் (02-10-2025) வரை

| | | |
|---|---|---|
| *28.07.2025* | திங்கள் | ஆடிப்பூரம் |
| *01.08.2025* | வெள்ளி | சுந்தரர் குருபூசை |
| *06.08.2025* | புதன் | பிரதோஷம் |
| *08.08.2025* | வெள்ளி | வரலட்சுமி விரதம் |
| *16.08.2025* | சனி | ஆடிக் கிருத்திகை |
| *20.08.2025* | புதன் | பிரதோஷம் |
| *26.08.2025* | செவ்வாய் | விநாயக சதுர்த்தி |
| *05.09.2025* | வெள்ளி | பிரதோஷம் |
| *06.09.2025* | சனி | நடேசர் அபிஷேகம் |
| *18.09.2025* | வியாழன் | பிரதோஷம் |
| *21.09.2025* | ஞாயிறு | மஹாளய அமாவாசை |
| *22.09.2025* | திங்கள் | நவராத்திரி ஆரம்பம் |
| *01.10.2025* | புதன் | சரஸ்வதி பூசை |
| *02.10.2025* | வியாழன் | விஜயதசமி |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: 8.30 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை: 5.00 மணிமுதல் 9.00 மணிவரை

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Title | | Home Phone | | | | |
| First Name | | Mobile No | | | | |
| Surname | | Email ID | | | | |
| Address | | Membership | ☐ | Annual £15.00 | ☐ | Life £150.00 |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | | | | |
| Post code | | | | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |



# Thirukkural Stories
# திருக்குறட் கதைகள்

சாவித்திரி ஆனந்தன்

## பெருமை

## Pride in Greatness

அதிகாரம்: 98 குறள்: 978
Chapter: 98 Kural: 978

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து

Meaning: Greatness always bows in dignified modesty; meanness revels in self- acclaimed vanity.

பொருள்: பண்புடைய பெரியோர் எப்பொழுதும் பணிவுடன் பழகுவார்கள் பண்பு இல்லாத சிறியோர், தம்மைத் தாமே புகழ்ந்து கொண்டு இறுமாந்து கிடப்பார்கள்.

தேவலோகத்தில் நாரதரும் தும்புருவும் வீணை வாசிப்பதில் வல்லவர்களாக விளங்கினார்கள். வைகுண்டத்தில் நாரதரும் கைலாயத்தில் தும்புருவும் தங்கள் இசைத்திறமையை வெளிப்படுத்தி வந்தார்கள். வீணை வாசிப்பதில் தம்மில் யார் சிறந்தவர் என்ற சர்ச்சை ஒரு சமயம் இவர்களிடையே ஏற்பட்டது.

இதைத் தீர்த்து வைக்கச் சிவனை நாடி, கைலாசம் நோக்கிப் புறப்பட்டார்கள். வழியில் ஒரு அடர்ந்த வனம். உள்ளேயிருந்து, “ஜெய் சிறீ ராம்”, “ஜெய் சிறீ ராம்” என்று ராம நாமம் ஒலித்துக் கொண்டேயிருப்பதைக் கேட்டு, “இந்த வனத்தில் எப்படி ராம நாமம்?” என்றெண்ணி வனத்தினுள் சென்றார்கள்.

ஒரு சிறு குன்றின் மேலமர்ந்து ஆஞ்சநேயர் ராமநாம ஜெபம் செய்து கொண்டிருப்பதைக் கண்டு இருவரும் அவரை வணங்கினார்கள். “யாழிசை வல்லுனர்களே! இருவரும் சேர்ந்து எங்கே போகிறீர்கள்?” என்று அநுமன் கேட்டார். அவர்கள் தங்களுடைய சர்ச்சை பற்றிச் சொல்லி, சிவனைத் தரிசித்துத் தீர்வு காணச் சென்று கொண்டிருப்பதைச் சொன்னார்கள்.

“சரியான போட்டிதான்! எனக்காக ஒரு தடவை உங்கள் இசையை வாசித்துக் காட்ட முடியுமா?” என்று அநுமன் கேட்க இருவரும் அவ்வாறே செய்தார்கள்.

“அருமையாக வாசிக்கிறீர்கள். நானும் ஒரு தடவை உங்கள் யாழை மீட்டலாமா?” என்று கேட்ட அநுமன், வீணையை மீட்டத் தொடங்கினார்.

அண்ட சராசரமும் அப்படியே உறைந்து நின்றுவிட்டது. அநுமன் அமர்ந்திருந்த பாறை உருகி வழிந்து ஓடத் துவங்கியது. நாரதரும், தும்புருவும் வெட்கம் அடைந்தார்கள்.

“கல்லும் கரையும் படியான அநுமனின் இசைக்கு முன் நாங்கள் யார்? இத்தனை திறமை இருந்தும் அடக்கத்துடன் வாழும் இவரைப் பார்த்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.....!” என்று நினைத்தார்கள்.

சிறிது நேரத்தில் இசையை நிறுத்திய அநுமன் யாழைப் பாறை மீது வைக்க, உருகிய பாறைக் குழம்பு கெட்டிபட்டு அதில் யாழ் ஒட்டிக்கொண்டது. உடனே அநுமன், “முனிவர்களே! நீங்கள் மீண்டும் இசை வாசியுங்கள். யாருடைய இசைக்கு இந்தப் பாறை மீண்டும் உருகுகிறதோ அவரே சிறந்த இசையாளன். இதற்காகச் சிவனிடம் போய் அவரை ஏன் தொந்தரவு செய்ய வேண்டும்?” என்று கூறினார்.

“வித்யா கர்வம் கூடாது. கர்வம் பெருமையைக் கொடுப்பது போலத் தெரியும். ஆனால், இறுதியல் அழிந்து விடும். அடக்கமே சிறந்த குணம். இதை உணர்ந்து இறைவனைப் பாடி உய்க!” என்று அநுமன் அவர்களுக்கு அறிவுரை கூறினார்.

In the heaven, the so called divine world, there were two talented veena (Yazh) players. One was Narathar and the other – Thumburu.

Narathar performed his instrumental music in Sri Vaikunda, while Thumburu performed the same in Kailash. Once, an argument arose between the two, as of the two, who the better player of the Veena was.

They wanted to take this question to Lord Shiva and settle the argument. Both of them set out on their journey to meet Lord Shiva. On the way to Kailas, there was a dense forest. On entering the forest, both of them heard a chantng, that went, “Jai Sree Ram”, “Jai Sree Ram”. It was loud and clear.

They were surprised to hear Rama namam coming from a dense forest and went inside to investigate as to where it was coming from.

There, they saw Anjaneyar, sitting on a small rock and chanting “Jai Sree Ram”

They went near and bowed to Anjaneyar. ‘Oh! The two great yazh performers! Welcome. Where are you going together?’ Hanuman asked.

They explained to Hanuman, that they have an argument about who the better player was between the two of them and going to Kailash to meet Shiva. Lord Shiva will resolve the dispute.

‘it’s a good competition of course! Can you both please play your veenas for me?’ asked Hanuman.

They both obliged and played the veena one after the other.

‘Both of you are excellent performers. Now, I like to play music on your veena. Can I? ‘ asked Hanuman. He then began to play veena.

The whole world froze and became still on Hanuman’s music! The rock in which Hanuman was seated, began to melt and flow.

Narathar and Thumburu felt ashamed of themselves.

‘Even the rock melts with Hanuman’s music, Who are we when compared to him?’ they thought. ‘Despite this extraordinary talent, Hanuman does not show any arrogance and instead, he is very humble and polite. We have to learn this lesson from him.’ they thought and regretted for themselves.

After sometime, Hanuman stopped playing music and kept the veena on the rock which had already started solidifying by which the veena got stuck in it.

Hanuman said, ‘Hello, hermits! You can play your veena again. For whose music this rock melts again, he would be the better of the two! So, you don’t need to go to Shiva and disturb him for this issue’.

Both Naratha and Thumburu bowed Hanuman and touched his feet.

‘Oh! Lord! Your music has touched our conscience. Everything is God’s grace. He is the only one within us! Our arrogance vanished. There will be no more arguments between us’ they told.

‘Arrogance is bad, even though it appears to provide greatness to you, actually it doesn’t Humbleness and politeness would be the best for anybody. Realise this and praise God with your music’.

Hanuman advised both sages.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்

# நவக்கிரகங்கள்

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்


பயணக்கட்டுரை

கிரகங்களால் நமக்கு நன்மை, தீமைகள் விளைகின்றன எனச் சோதிட வல்லுனர்கள் சொல்வர். ஆனால் நவக்கிரகங்களும் இன்ப, துன்பங்களை அநுபவிக்கின்றன. அவை சிவனை வழிபட்டு ஈடேறிய சிவத்தலங்கள் ஒன்பது. அவற்றை நவக்கிரகத் தலங்கள் என்று நாம் தவறாகப் புரிந்துள்ளோம்.

முன்னுரை:

ஒன்பது நவக்கிரக தலங்கள் உள்ளன. தலங்களைப் பற்றிக் கூற முன்னர் நவக்கிரகங்களைத் தெரிந்து கொள்வது சுலபமாக இருக்கும். சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது ஆகியவை அவை. நினைவில் நிற்க, ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது எனக் கொள்ளலாம்.

சுப நவக்கிரகங்கள் : குரு, சுக்கிரன், புதன், சந்திரன்.
அசுப நவக்கிரகங்கள் : சூரியன், செவ்வாய், இராகு, கேது.
ஆண்கிரகங்கள்: சூரியன் செவ்வாய், குரு
பெண்கிரகங்கள்: சந்திரன், சுக்கிரன். இராகு.
அலி: புதன், சனி, கேது.




கிரகங்களின் வலிமை:

புதனை விட செவ்வாய் வலியவர்
செவ்வாயைவிட சனி வலியவர்
சனியை விட குரு வலியவர்
குருவை விட சுக்கிரன் வலியவர்
சுக்கிரனை விட சந்திரன் வலியவர்
சந்திரனை விட சூரியன் வலியவர்
சூரியனை விட இராகு, கேது வலியவர்
ஆக அனைத்துக் கிரகங்களை விட இராகு, கேது வலியவர்கள்
.

எமது உடலில்:

தலை - சூரியன், முகம் - சந்திரன், கை, தோள் - செவ்வாய்
கழுத்து - புதன், இருதயம் - குரு

நவக்கிரகங்கள் அணியும் ஆடை நிறங்கள்

சந்திரன், சுக்கிரன் - வெண்மை
புதன் - பச்சை
குரு - மஞ்சள்
சனி, இராகு, கேது - கருமை

நவக்கிரகங்களின் குணங்கள்:

சூரியன் - வெப்பம் சந்திரன் - தட்பம்
சுக்கிரன் - ரஜகுணம் செவ்வாய் - தமோகுணம்

இராசிகளில் இருக்கும் காலங்கள்:

சந்திரன் - 2 நாள்கள் சூரியன் - ஒரு மாதம்
சுக்கிரன் - ஒரு மாதம்
இராகு, கேது - 6 மாதங்கள் குரு - ஒரு வருடம்
சனி - 2 1/2 வருடங்கள்

திருமுறைகள் - 12 இராசிகள் - 12
ஆசிரியர்கள் (திருமுறை) 27 - நட்சத்திரங்கள் 27

| | | |
|---|---|---|
| கிரகங்கள் - | 09 | |
| இராசிகள் - | 12 | 48 - ஒரு மண்டலம் |
| நட்சத்திரங்கள் - | 27 | |
| மொத்தம் | 48 | |

விதி - லக்னம்
மதி - சந்திரன்
கதி - சூரியன்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

திருஞானசம்பந்தர் - திருமறைக்காடு (வேதாரண்யம்)

சூரியன்:

நவக்கிரகங்களில் முதன்மையானவர். நவக்கிரக நாயகன். காசிப முனிவருக்கும் மனைவி அதிதிக்கும் பிறந்ததால் ஆதித்தன் என்ற பெயருண்டு. சிறந்த அறிவாளி. ஆஞ்சநேயரின் குருவாகும். மிக ஆண்மைத் தன்மை கொண்டவர். பல பெண்களோடு தொடர்புண்டு.

எம் கண்முன்னே தோன்றும் கிரகம்.

வட்டமான ஆசனத்தில், ஏனைய எட்டுக் கிரகங்கள் மத்தியில் இருப்பவர். எமது ஞானிகள் இதை எப்போதோ கணித்தனர். விஞ்ஞானிகள் சமீபத்தில்தான் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். தேரில் ஒற்றைச் சக்கரம் கொண்ட, ஏழு குதிரைகள் சேர்ந்து இழுக்கப் பவனி வருபவர். சூரியனின் கதிர்கள் ஏழுவகை நிறங்கள் கொண்டவை எனக் கவனிக்கவும்.
சூரியனின் மனைவி சஞ்சியையால், இயமன், மனு, யமுனை ஆகியோர் பிள்ளைகள்.

மறு உருவமான சாயாதேவிக்கு சனி, பத்திரை பிறந்தனர்.

சூரியனுக்கு எதிரி சனி. இதனாற்போலும் நவக்கிரக சந்நிதியில் சூரியனுக்குப் புறமுதுகு காட்டி சனி வீற்றிருக்கிறார்.

சகல தாவரங்களும், மனிதர்களும், உயிரினங்களும் சூரியக் கதிர்களால் நன்மையடைகின்றன.

சூரிய நமஸ்காரம் :
நமஸ்காரப் பிரியர் சூரியன். யோகாசனத்தில் சூரியநமஸ்காரம் உண்டு. சூரியனின் பன்னிரண்டு நாமங்களைக் கூறி, பன்னிரண்டு விதமான அப்பியாசங்கள் செய்து, உடலை மிகுதி ஆசனங்கள் செய்யத் தயார்ப்படுத்துவர்.

மந்திரங்களில் நான் காயத்திரி:
யார் நமது அறிவைத் தூண்டுகிறாரோ, அந்தச் சுடர்க்கடவுளின் போற்றுதற்குரிய ஒளியைத் தியானிப்போமாக. காயத்திரி மந்திரத்தை எமக்கு அளித்தவர் ஒரு க்ஷத்திரியர் ஆகும்.

சூரியனார் கோயில்:

சூரிய வழிபாடு ஆதிகாலத்திலிருந்தே ஆரம்பமாகியது. நான்கு வேதங்களும் சூரிய பகவானைப் பற்றிப் புகழ்ந்து பேசுகின்றன. திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் “பலர் புகழ் ஞாயிறு” எனக் கூறியுள்ளார். ஆதிசங்கரரின் ஷண்மதத்தில் முதல் வழிபாடு சூரியனுக்கே.

மூலவர்- சிவசூரியர்
அம்பாள் - உஷாதேவி. சாயாதேவி
தலவிருட்சம் - வெள்ளெருக்கு
தீர்த்தம் - சூரியதீர்த்தம்
இடம் - திருமங்கலக்குடி
மாவட்டம் - தஞ்சாவூர்

தேவர்களுக்குள் உயர்ந்தவர் என்பதால் “மகாதேவன்” என்றும் அழைப்பர். சிவாகமங்கள் சூரியமண்டலத்தின் நடுவே ஈசன், சிவன் உறைகிறார் என்று கூறுகின்றன. சிவபெருமானின் கண் சூரியன் எனவும் கருதுகின்றனர்.

மூன்று நிலைகள் கொண்ட இராஜ கோபுரம். அதில் “அருள்மிகு சிவசூரியர் பெருமான்” ஆலயம் எனக் குறிக்கப்பட்டுள்ளது. இது ஒரு நவக்கிரக கோயில் ஆகும். ஒன்பது கிரகங்கள் மாத்திரம் இங்கு தனிக்கோயில் கொண்டு இருக்கின்றன. ஒரு கிரகத்திற்கும் வாகனம் கிடையாது.

தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள், அதுவும் ஞாயிறு தினத்தில் பத்தாயிரம் மக்கள் வழிபடும் பெருமை உள்ள நவக்கிரக தலமாகும். சூரியனார் கோயிலைத் தரிசிக்க முன்னர் சமீபத்திலுள்ளது. ஒரு கி.மீ தூரத்திலுள்ள திருமங்கலக்குடி பிராண நாகேஸ்வரர், மங்களாம்பிகை ஆலயம் சென்று வழிபடுவது முறையாகும்.

கருவறையில் சூரியனார் நின்ற நிலையில், சாந்த சொரூபியாய் மேற்குத் திசை பார்த்தபடி, இடது பக்கத்தில் உஷாதேவி, வலது பக்கத்தில் சாயாதேவியோடு திருமணக் கோலத்தில், மலர்ந்து காட்சியளிக்கிறார். அவரது இரு கரங்களிலும் செந்தாமரை மலர்கள் இருக்கின்றன.

சூரிய பகவானின் வெப்ப உத்திரத்தை தணிக்க குருபகவான் எதிரில் கோயில் கொண்டு வீற்றிருக்கிறார். சனி, இராகு, கேது, செவ்வாய் நான்கு திசைகளிலும் கோயில் கொண்டு இருக்கின்றனர்.

சூரியனார் முன்னே கொடிமரம் உள்ளது. இடையில் குதிரை இருக்கிறது. சிவ ஆலயங்களில் நந்தி இருப்பது போன்று இது உள்ளது. நாங்கள் மகர இராசியில், தை மாதத்தில் சூரியன் பிரவேசிக்கும் நாளைத் தைப்பொங்கல் எனக் கொண்டாடி சூரிய நமஸ்காரம் செய்வது ஞாபகமிருக்கலாம்.

மாதத்தில் முதல் வரும் ஞாயிற்றுக்கிழமை இக்கோயிலில் விசேட பூசைகள் , அர்ச்சனைகள், ஆராதனைகள், பலவித உபசாரங்கள் பெருமளவில் நடைபெறும். மக்கள் கூட்டம் அலைபாயும்.

பித்ருதோஷம் உடையோர். சூரியதிசை, சூரியபுத்தி நடைபெறுவோர், ஆண்வாரிசு இல்லாதோர், அரச வேலைகளில் அவதிப்படுவோர்- அரச வேலை தேடுபவர், ஏழரைச்சனி, அட்டமத்துச்சனி உடையோர், கண்வியாதி, பதவி உயர்வு, விளையாட்டில் மேன்மை பெற, ஆத்ம பலம் விரும்புவோர் - ஏனைய மதத்தவர், தனி நவக்கிரகக் கோயிலைத் தேடி அலையாமல் ஒரே கோயிலில் யாவரையும் வழிபடுவர்.

ஒரு ஞாயிறு தொடக்கம் பின்னர் பன்னிரண்டு ஞாயிறு வரை விரதம் இருந்து மக்கள் அநுக்கிரகம் பெறுவர். ஒரு காணொளியில் தமிழ் நாட்டு துடுப்பாட்ட வீரர் தன் குழாமோடு சென்று கலகலப்பாக வழிபாடு செய்வதைப் பார்த்தேன்.

தீபம்:

இது அஞ்ஞான இருளைப் போக்கி ஞான ஒளி ஏற்படுத்துவது. வம்சாவழி விருத்திபெற நெய் அல்லது எண்ணெய் தீபம் ஐந்து ஏற்றி வழிபடுவர். திருமணங்கள் தடை நீங்க 7 தீபங்கள் ஏற்றுவர். பசு நெய் கோதுமைப் பண்டங்கள் படைத்தும், அன்னதானங்கள் கொடுத்தும் மக்கள் அநுக்கிரகம் பெறுவர்.

சூரியனுக்கு நமஸ்காரமே பிரியமானது. இதைத் தண்டம் சமர்ப்பிப்பது என்பர். தண்டம் என்றால் கழி அல்லது கோல். கையில் பிடித்து கோலை விட்டால் அது விழுந்துவிடும். அதேபோல் சரீரம் நமது அல்ல, இது இறைவனுடையது என்ற எண்ணத்துடன் கீழே விழுந்து ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமாகவும், பெண்கள் பஞ்ச அங்க நமஸ்காரம் செய்வர்.

அபிடேகப்பிரியர் - சிவன்
அலங்காரப்பிரியர் - விஷ்ணு
நைவேத்தியப்பிரியர் - பிள்ளையார்
நமஸ்காரப்பிரியர் - சூரியன்

# ஆவணிமாதச் சிறப்புக்கள்

திரு க செல்வரத்தினம்

காவணியப் பெருமானாவது கனிமலரால் கலை காட்டுகின்ற
பாவணியாவது அநுபூதியால் அன்பு பற்றகின்றோம்
நாவணியாவது நாமத்தினால் அன்றோ நாடும் என் முன்
ஆவணித் திங்களில் வந்தருள்வாய் என்னை ஆண்டவளே!

- அகத்தியர்

விநாயகப் பெருமான்:

தெய்வங்களிலே விநாயகருக்குத தனிப்பெரும் இடமுண்டு. கோயில் வழிபாட்டில் அவரை வழிபட்ட பின் ஏனைய தெய்வங்களை வழிபடுவது வழக்கமாகும். பூசை முறைகளிலும் அதுவே பின்பற்றப் படுகிறது. எந்தக் காரியத்தை செய்யத் தொடங்கும் போதும் விநாயகரை வணங்கிய பின் வழிபடும் முறையுண்டு அத்தகைய முதன்மை இடம் அளித்தவர் சிவபெருமான். தன் பிள்ளை தன்னிலும் முக்கிய இடம் வகிக்க விரும்புவர் பெறறோர். தேவ லோகத்திலும் இம் மரபு காட்டப்பட்டுள்ளது

தோற்றம்:
சங்கடகர சதுர்த்தி விரதம், தூர்வா கணபதி விரதம் ஆகியவை புராணங்களில் கூறப்பட்டுள்ளன சங்கடகர சதுர்த்தி விரதம் என்பது நோய், கடன், சிறை வாசம் போன்றவற்றில் இருந்து விடுபட நோற்கும் விரதமாகும் இவ் விரதத்தை கிருட்டிண பரமாத்மா தருமருக்கு வனவாச காலத்தில் உபதேசித்தாகப் பாரதம் கூறுகிறது. ஆவணி மாத தேய்பிறைச் சதுர்த்தி காலம் சிறந்தபடியால் பூசை செய்து வேண்டிய வரங்களைப் பெறலாம். தூர்வா கணபதி விரதம் ஆவணி அல்லது கார்த்திகை மாத சதுர்த்தியில் சந்தானம் பெருகவும் செல்வத்தைப் பெறவும் நோற்பர்.

விநாயக தத்துவம்:
இந்து சமயம் தத்துவங்கள் நிறைந்த சமயம். சிலர் அது என்ன குள்ள உருவம், யானைமுகம், சந்திரன் கேலி பண்ணினான் என்ற கேலியாகப் பேசுவதுண்டு. இறைவன் அருவ உருவ அருஉருவ வடிவம் கொண்டவன். இறைவன் எந்த வடிவமும் எடுக்கலாம் என்பதில் வியப்பில்லை. யானை முகம் விலங்கு இனத்தையும், நெற்றி, தலை கண்கள் மனித வடிவத்தையும், பேளை வயிறும் குறுகிய கால்கள் பூத கணத்தையும், தும்பிக்கை ஓங்கார வடிவமான 'ஓம்' எனும் ஒலியின் வடிவமாக காண்கின்றோம். சிவன் விநாயகரை கணங்களின் தலைவராக நியமித்தபடியால் கணபதி எனக் குறிப்பிடப்படுகின்றார். ஆனை முகன், விக்கினேஸ்வரன் முதலான பல பெயர்களால் அழைக்கப் படுகின்றார் பாசத்தை ஏந்திய கை படைத்தலையும், தும்பிக்கை அருளலையும், அங்குசம் ஏந்திய கை அழித்தலையும், மோதகம் ஏந்திய கை காத்தலையும் குறிக்கின்றன. பிள்ளையார் 32 மூர்த்தங்களில் காட்சி அளிக்கின்றார். .கோயில்களுக்கு நாம் போகும் போது முதலில் பிள்ளையாரை வணங்கிய பின் மூலவரையும் ஏனைய பரிவார மூர்த்தங்களையும் வணங்க வேண்டும். சிவ குடும்பத்தில் மூத்த பிள்ளை என்பதால் பிள்ளையார் என இவரைப் பெருமையோடு அழைப்பர்.

இந்திரன், விட்டுணு, பிரமன், தக்கன், மன்மதன், சந்திரன், நளன், இராவணன், பாண்டவர், அகத்தியர், காசிபன், ஔவையார் ஆகியோர் வணங்கி இட்ட சித்திகளைப் பெற்றனர் நாமும் அவ்வழியில் வணங்கி விரதம் அநுட்டித்து நல்வாழ்வு பெறுவோம். சிவம் ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்க வடிவங்கள் எடுக்கிறார்.

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

- பெரியபுராணம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

- திருமந்திரம்

விநாயகர் வாகனம்:

அவரது வாகனம் பெருச்சாளி அது ஒரு குறியீட்டுச் சின்னமே. கயாமுகசுரன் அந்த வடிவத்தில் தன்னை வாகனமாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டியதனால் மனமுவந்து விநாயகப் பெருமான் ஏற்றுக் கொண்டார்.

விநாயக சதுர்த்தி:

ஆவணி என்றதும் நினைவுக்கு வருவது விநாயக சதுர்த்தியாகும். தஞ்சை மாவட்டத்தில் பாப நாசம் தாலுக்காவில் ஊர்மக்கள் தங்களுக்கிடையில் ஏற்படும் சச்சரவுகளைப் பேசி சமரசம் செய்ய வேண்டும் என்பது ஐதிகம்.. ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியில் 21அறுகம்புல் 21 பலகாரம் 21 மலர் இட்டு அர்ச்சிப்பது சிறப்பாகும். விநாயகர் அகவல் விநாயக கவசம் ஆகிய பாக்கள் ஓதுபவர்களுக்கு நோய், வறுமை, இடையூறுகள் நீங்கும். தீர்க்காயுள், புத்திரப் பேறு, செல்வம், நட்பு, சௌகாரிய வெற்றி சித்திக்கும்.

காரிய சித்தி பெறுவதற்காகவும் அடாப்பழி நீங்கப் பெறுவதற்காகவும் சித்தி விநாயக விரதம் நோற்கப் பெறும். காரிய சித்திமாலையைப் பாடுபவர்கள் நினைத்த காரியம் சித்திக்கும் என்பது ஐதிகம். வட இந்தியாவில் மராட்டிய மன்னன் வீர சிவாஜி காலத்தில் அரச குடும்ப விழாவாகக் கொண்டாடப்பட்டது. 18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் இந்தியாவை ஆட்சி செய்த காலத்தில் தேசிய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான பால கங்கா திலகர் சகல மக்களையும் இணைத்து தேசிய விழாவாகக் கொண்டாடத் தளம் அமைத்தார். வைகாசி மாத வளர்பிறை வெள்ளி தொடக்கம் அம் மாத வெள்ளிகளில் அநுட்டிப்பது சிறப்பாகும்

சதுர்த்தி:

சந்திரன் விநாயகப் பெருமானின் உருவத்தைக் கண்டு பரிகசித்தான். விநாயகர் அவ்விகார உருவத்தைக் கொடுத்துச் சோதித்தார் பிழையை உணர்ந்ததால் அவன் ஆவணி மாத சுக்கில பட்ச சதுர்த்தியில் வழிபட்டு வந்ததால் அலைச்சல் நீங்கி விநாயகப் பெருமான் அருளும் கிடைத்தது.

சங்கட சதுர்த்தி:

ஆவணிமாத கிருட்டிண பட்சத்து (தேய் பிறை) சதுர்த்தியில் அநுட்டிக்கப்படுகின்றது. நோய் துன்பம் போன்ற சங்கடங்கள் நீங்க இவ்விரதம் அநுட்டிக்கப்படுவது ஆகும். இறைவனது பல வித நாமங்களை ஓம் எனும் ஓங்காரத்துடன் வணக்கம் செலுத்துவதே அர்ச்சனையாகும். நிவேதனப் பொருள்களாக அறுசுவை உணவு, தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் அகியவற்றுள் ஒவ்வொன்றும் 21 நிவேதனம் செய்தல் வேண்டும். விநாயக சதுர்த்தி விரதம் பற்றிய புராணக் கதைகள் உண்டு. துரியோதனாதியர்களின் கொடுமையினால் மனவேதனை அடைந்த பாண்டவர்கள் சூத முனிவரின் ஆலோசனைப் படி விநாயக விரதத்தைக் கடைப் பிடித்து ஆட்சி அதிகாரத்தைப் பெற்றனர். திருவாவடுதுறை கச்சியப்ப முனிவர் இயற்றிய விநாயக புராணம் வரலாற்றுக் களஞ்சியமாக உள்ளது. ஔவையார் இயற்றிய விநாயகர் அகவல் சிறந்த பாராயண நூலாகும்..

ஆவணி மூலம்:

குதிரை வாங்கச் சென்ற மாணிக்க வாசகரைத் திருப்பெருந்துறையில் சிவபெருமான் மானிட வடிவம் தாங்கி குருவாகி அவருக்குத் திருவடி தீட்சை கொடுத்து ஆட்கொண்டருளினார். மன்னனிடம் குதிரை வாங்குவதற்குக் கொண்டு போன பணம் முழவதையும், திருப்பணிக்குச் செலவு செய்தார். இதை ஒற்றர் மூலம் அறிந்த பாண்டிய மன்னன் தொடர்பு கொண்ட போது, ஆவணிமாத மூல நட்சத்திர நாளன்று குதிரைகள் வருமென்று சொல்லி அனுப்பினார். அன்று அவ்வாறே சிவபெருமான் காட்டிலுள்ள நரிககெல்லாம் பரிகளாக்கி மதுரை வீதியிலே வந்தருளினார். அன்றிரவு பரிகளெல்லாம் நரிகளாக அட்டகாசம் செய்தன. மதுரையில் இன்றும் மூலப் பெரு விழாவாக இது கொண்டாடப் படுகின்றது.

சனிப்பிரதோஷம்:

பிரதோஷம் என்பது முற்பிறப்பில் செய்த குற்ற நீக்கமாகும். மாதந் தோறும் வரும் வளர்பிறை காலத்திலும் தேய்பிறை காலத்திலும் வரும். 13 ஆம் நாள் பிரதோஷ காலம். இருதடவையும் வரக் கூடும். தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து திருப்பாற் கடலைக் கடைந்த போது ஆலால விஷம் தோன்றியது. தேவர்கள் சிவபெருமானைச் சரண் அடைந்து நிற்க எம்பெருமான் நஞ்சை உண்டு அவர்களைக் காத்த தினம் ஏகாதசி ஆகும். அத்துடன் தேவர்கள் நஞ்சை உண்ணாமல் காத்து அருளியதோடு திருநடனக் காட்சி கொடுத்ததும் சனிக்கிழமையோடு கூடிய பிரதோஷமா கையால் இந்நாள் மிக மேலானது. தேவர்கள் மறந்து களிப்பில் மூழ்கி இருந்தனர் அடுத்த நாள் துவாதசியில் தேவர்களுக்கு அமுதம் கிடைத்தது. அடுத்து திரயோதசி நாளில் குற்றத்தை உணர்ந்து சிவபெருமானை வேண்டினர். நந்தியம் பெருமானுடைய கொம்புகளுக்கூடாக இறைவன் காட்சி கொடுத் தருளினார்.

ஆவணி 15

இந்திய சுதந்திரம் கிடைத்தது 1947 ஆவணி 15 அன்று. பகவான் அரவிந்தர் பிறந்த நாளும் இதே நாள். இவ்விரு நாள்களும் ஒன்றாகி வருவதால் இணைத்து நினைவு கொள்ளலாம்

ஆவணி ஞாயிறு:

ஒவ்வொரு மாதத்திலும் வரும் ஞாயிற்றுக் கிழமை சிறப்புடையது. சூரியனைக் குறித்து விரதம் அநுட்டிப்பவர்கள் விரதம் அநுட்டித்துக் கடைசி ஞாயிறு பொங்கலிட்டு வழிபாடு செய்வர் -

"ஆயிரம் நாமத்தில் அரச்சனை செய்தேன் அடி பணிந்தேன்
தாயினும் அன்பு பொழிந்தென்னை தாங்கும் தமிழரசி
பேயும் பிணியும் வறுமையும் போக்கி விளக்கிடுவாய்
ஞாயிறு தோறும் வருவாய் சிவலோக நாயகியே"

- அகத்தியர்

வேதக் கதை:

விசுவரூபன் துவஸ்டாவின் புத்திரன் ஆவர். அசுரர்களின் சகோதரி புதல்வன் ஆவர். தேவர்களுக்கு தீமை ஏற்படுத்த ஹோமம் செய்தார். இதை அறிந்த இந்திரன் அவரைக் கொன்றான். இதனால் இந்திரனுக்கு பிரமஹத்தி தோசம் சூழ்ந்தது. இது அகல இதை வாங்கிக் கொள்பவருக்கு வேண்டிய வரம் தருவதாக இந்திரன் கூறினான். ஒரு பங்கை பூமியும் மறு பங்கை மரமும் பெற்றன.

உமா மகேஸ்வர விரதம்:

ஒவ்வொரு மாத பௌணர்மி நாளும் மகேஸ்வர விரதம் முக்கியமானது. துர்வாசக முனிவரின் சாபத்தால் மகாலட்சுமியும் மகா விட்டுணுவும் பிரிந்திருந்தனர். உமாமகேஸ்வர விரதத்தை அநுட்டித்து இவர்கள் இருவரும் ஒன்றிணைந்தனர். ஆவணி மாத உமா மகேஸ்வர விரதம சிவ விரதங்களில் குறிப்பிடத்தக்கது. புத்திரப் பேறு, பிரிந்திருக்கும் கணவன் மனைவி ஒன்றிணைய இவ் விரதம் சிறப்பானது. ஒரு சமயம் மஹரிஷிகள் ஒன்றுகூடி உலகத்திற்குக் காரணமான பொருள் எது என விவாதித்தனர். இதை அறிந்தால் பேரானந்தம் பெறலாம் என வாதஞ் செய்தனர். அதில் தீர்மானம் ஏற்படாததால் அனைவரும் கடுந்தவம் புரிந்தனர். தவப்பயனாக முதலில் வித்தியாஸ்வ ரூபிணியான அம்பிகை ஞானக் கண்ணுக்குப் புலப்பட்டாள். அவளை வணங்கித் துதிக்க மறுபடியும் சிவமும் சக்தியும் உலகக் காரணம் என உணர்ந்தனர். அந்நாளே இந்த விரதமாகும். துர்வாசர் சிவாம்சமானவர். கைலாசத்தில் சிவ தரிசனமும் வில்வ மாலையும் கிடைத்தது. அதைப் பெற்று வரும் வழியிலே கருடன் மீது விட்டுணுவைக் கண்டார். அம்மாலையை அவருக்கு அளித்தார். விட்டுணு கண்ணில் ஒற்றி மாலையைக் கருடன் கழுத்தில் வைத்தார். கோபங் கொண்ட துர்வாசர் "லட்சுமி உன்னை விட்டுப் பிரிவாள்" எனச் சபித்தார். லட்சுமி பாற் கடலில் தங்கினாள். கருடனும் சக்தி இழந்து குகையில் வசித்தார். இதை அறிந்த சிவன் உமா மகேஸ்வர விரதத்தை அநுட்டிக்கும்படி விட்டுணுவிடம் கூறினார். ஆதனால் விட்டுணு கடலைக் கடைய வெளி வந்த லட்சுமியையும் கருடனையும் பெற்றார். கௌதமர் தேவ விரதன் என்ற அரசனுக்கு மேற்படி விரத மகிமையைக் கூறினார்.

ஆவணி மாதக் குரு பூசை நாள்கள்:

குலச் சிறையார்
செருத் துணையார்
புகழ்த் துணையார்
இளையான் குடிமாறர்
குங்கிலியக் கலயநாயனார்
அதிபத்தர்
மறைஞான சம்பந்தர்



# SAIVA SCHOOL OF HINDUISM

## (By late S. Shivapathasundaram B.A)

### CHAPTER 4

## GOD

(continued from last issue)

The Contemplation of God:

Receiving these five invaluable gifts from God, our sense of gratitude would ordinarily fill our minds with thoughts of Him. But we hardly ever think of Him. This is due to an error in our way of living. We have been used to regard the world and the body as ultimate realities and have fixed our thoughts on these. We find it hard to extricate our thoughts and use them for the attainment of real bliss.

But there have been men who have realised the evanescence of the world and the eternal bond of God's Love and found real joy in it.

A Saiva Saint, addressing God, says, "O, giver of peace, you gave me yourself and got me in return. Who is the cleverer of the two? I got endless bliss from you. What did you get in return? O master, who has made a temple of my heart, O Siva, abiding at Thiruperunthurai, O Father, O Lord, who has taken possession of my body, to you I am no equal as an article of barter".

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னை;
சங்கரா ஆர்கொலோ சதுரர்?
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்?
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே!
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்!
யானிதற் கிலனோர்கைம் மாறே

(Thiruvachakam by Manivachakar)

Things of the world do not give us joy unmixed with grief. Our dearest friend raises sorrow by his inevitable absence from our company or by becoming a prey to misfortunes. But God's Love is ever with us and undergoes no change to grieve us. The highest earthly love

known to us is that of a mother, and therefore it is natural and appealing to us to conceive God's Love as a perfect mother. The thought of this unceasing endless store of love, ever with us, helping us, cheering us, and illuminating us, should fill us with ecstatic joy.

Another Saiva Saint says, "As I quietly and calmly contemplated God's Love with real devotion, there issued forth a higher form of joy. On the day I tasted it, sugar seemed bitter and fresh honey tasted extremely sour"

பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை
விரும்பும் குமரனை மெய்யன்பி னான்மெல்ல மெல்ல வுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தத் தித்தித் தறிந்த வன்றே
கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்த துவே

(Kanthar Alangaram by Arunagirinathar)

When Love of God is with us, the loss of worldly possessions would be nothing to us. Despair in this world would be impossible. Sorrow or grief would find no room. Fearlessness and joy would reign in our hearts. A saint says, "We are not the slaves of anyone. We are not afraid of death. We are free from woes and sorrows. We have no guile. We are above all things. We know no diseases. We shall not bow to anything. It is all joy with us, never sorrow. We are slaves of one who is no slave of anyone. We are eternally bound to Him."

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

(Thiruthandakam by Appar)



He further says, "Seeing that He who made the universe and found joy in it resides in my heart as mother, father, and brother, what cares can I have? He is the friend of His devotees. He of Tirupatiripulyur has always been the invisible companion of those who contemplate Him.”

ஈன்றாளு மாயெனக் கெந்தையுமா யுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன் திருப் பாதிரிப் புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே

(Thevaaram by Appar)

The contemplation of God is far more precious than even the five invaluable gifts of God's Love. Making worldly possessions valueless, contemplation frees us from pride and lust; giving bliss, it takes off anger, hatred,and jealousy; taking us to God, it gives us mother, father, brother and friend, inseparable from us, and causes the flow of a never-failing fountain of joy.

Even if God’s love were not required, for the evolution of the material universe, it is necessary to cleanse our hearts, to ennoble us, and perfect us. No earthly power can make such a strong appeal to our feelings and uplift the soul in the way that divine contemplation can do. All the attempts that society makes to this end are as the light of a glow worm before the mid-day sun. Divine conemplation is the highest moral lever, besides being an end by itself.

If we can contemplate God with all love and let His Love dominate our minds, the thought of God will come to us of itself in whatever business we may be engaged, sanctify every one of our acts, and make our lives sublime and holy.

பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

திருவாசகம் - மணிவாசகர்

# பாஞ்சாலி சபதம்



விகர்ணன் நீதி நெறி உணர்ந்தவன். தனது அண்ணனான துரியோதனனின் அரசவையில் நடைபெற்ற அநீதியைக்கண்டு மனம் நொந்தான். அவற்றைச் சுட்டிக்காட்டியதுடன், பிதாமகர் கூடத் தவற்றைச் சரியென்று சொல்கிறாரே என்று பலவாறாக எடுத்துச் சொன்னான். அங்குள்ள அரசர்கள் பெரியோர்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள்.

அண்ணனுக்குத் திறல்வீமன் வணங்கி நின்றான்
அப்போது விகர்ணனெழுந் தவைமுன் சொல்வான்;
"பெண்ணரசி கேள்விக்குப் பாட்டன் சொன்ன
பேச்சதனை நான்கொள்ளேன். பெண்டிர் தம்மை
எண்ணமதில் விலங்கெனவே கணவ ரெண்ணி
ஏதெனினும் செய்திடலாம் என்றான் பாட்டன்,
வண்ணமுயர் வேதநெறி மாறிப் பின்னாள்
வழங்குவதிந் நெறியென்றான்; வழுவே சொன்னான்.

ஆனால், குந்தியின் மைந்தனாக இருந்தபோதும் கர்ணன் துரியோதனனுடன் நண்பனாகக் கூடி வாழ்ந்த பழக்க தோஷத்தில் தன் நண்பன் செய்கைக்கு முழு ஆதரவு அளித்து, விகர்ணனைப் பார்த்துக் கேலியாகச் சிரித்து, "அறிவற்ற சிறியனே! நீ சொன்னது சரிதானடா! இங்கு கூடியிருக்கும் அரசர்கள் எல்லோரும் நாம் செய்வது தவறல்ல, சரியானது என்றே தலையிடாது ஏற்றுக்கொண்டு அமைதியாக இருக்கிறார்கள். நீதான் சரியான நீதி எதுவென்று சொல்லிவிட்டாய். விவேகமற்றவனே! பகுத்தறிவு இல்லாதவனே!" என்று கூறுகிறான். கொடைக்குக் கர்ணன்; வில்வித்தையில் அருச்சுனனுக்கு நிகரானவன் எனச் சொல்லப்படுகின்ற கர்ணன், நீதி எதுவென்று உணரமுடியாத அவனுக்கு என்ன இருந்தென்ன? "இந்தப் பெண்மணி (திரௌபதி) நீதி கேட்டு அழுவதைக் கேட்டு இரங்கிப் பிதற்றுகிறாய். அளவுக்கு மீறிக் கதைக்கிறாய். இவளை நாங்கள் சூதிலே வென்றது பாவமான செயல் என்று சுட்டிக் காட்டுகிறாய். வெட்கமில்லாதவனே! பொறுமை அற்றவனே ! ஒழுக்கமான நன்னெறி எதுவென தகுதியற்ற நீ நீதியை எப்படிக் காண்பாய்?"

மார்பிலே துணியைத் தாங்கும்
வழக்கங்கீ ழடியார்க் கில்லை
சீரய மகளு மல்லள்;
ஐவரைக் கலந்த தேவி
யாரடா பணியாள்! வாராய்;
பாண்டவர் மார்பி லேந்தும்
சீரையுங் களைவாய்; தையல்
சேலையுங் களைவாய்! என்றான்.

**அநுஜா**

"இங்கே மார்பிலே உத்தரியம் (சால்வை) அணியும் வழக்கம் கீழான அடிமைகளுக்கு இல்லை என்பதை அறிந்து கொள்வாய். ஐந்து கணவன்மாருடன் கூடி வாழ்ந்து வந்த இவள் (திரௌபதி)

சிறந்த பெண்மணியல்லள் என்று கூறியது மட்டுமன்றி, வரலாறு காணாத கொடுமையின் உச்சக் கட்டமாகப் பாண்டவரின் மார்பில் அணிந்திருக்கும் உத்தரியத்தைக் கழற்றுவதுடன், இந்தப் பெண்ணின் சேலையையும் கழற்றிவிடு" என்று கர்ணன் சொல்கிறான். துரியோதனனை விடக் கொடுமையானவன் கர்ணனே என இதிலிருந்து அறியலாம். இவன், ஆ..... இருண்ட மனதுடைய இவனா சூரியனின் மைந்தன் என்ற வாசகங்களை எண்ண வைக்கிறது இந்த நிகழ்வு. பாரதியார் தனது கவித்திறத்தால் வாசகரின் சிந்தனையைத் தூண்டும் வகையில் கொண்டு செல்கிறார். கர்ணனது கொடிய வார்த்தைகளைக் கேட்டதுமே பாண்டவர் தம் மார்பிலணிந்த வஸ்திரத்தைப் பணியாளர் வருமுன்பே கழற்றிப் போட்டனர். மருட்சியுடைய மான்போன்ற கண்களையுடைய ஞானசுந்தரியாகிய பாஞ்சாலி, "கடவுளே இதிலிருந்து நான் எப்படித் தப்பப்போகிறேனோ!" என்று ஏங்கிக் கைகள் இரண்டையும் சேர்த்து (இணைத்து) கொண்டு தவிக்கிறாள். இறைவனிடம் சரணடைகிறாள்.

இவ்வுரை கேட்டா ரைவர்
பணிமக்க ளேவா முன்னர்
தெவ்வர்கண் டஞ்சு மார்பைத்
திறந்தனர், துணியைப் போட்டார்.
நவ்வியைப் போன்ற கண்ணாள்
ஞானசுந் தரி, பாஞ் சாலி
எவ்வழி உய்வோ மென்றே
தியங்கினாள் இணைக்கை கோத்தாள்இ

பணியாட்களைத்தான் கர்ணன் செய்யும்படி கட்டளையிட்ட போதும், துச்சாதனன் இத்தருணத்திற்குக் காத்திருந்தவன் போல வேகமாக எழுந்து அந்தச் சபையிலே அவ்வளவு சனங்கள் மத்தியிலும் அன்னையின் துகிலை (சேலையை) கழற்றத் தொடங்குகிறான். ஐயோ தேவர்களே! என்று அலறிக் கொண்டே விதுரன் நிலத்தில் மயங்கி வீழ்கிறான். ஆனால், பயித்தியம் பிடித்தவன் போல அந்தப் பேயனும் துகிலினைக் கழற்றும் போது அன்னை திரௌபதி இறைவனிடம் தன்னை ஒப்படைத்து உலகத்தை மறந்தாள்.(இறைவனாகிய அருட் சோதியில் தன்னை ஒப்படைத்து விட்டபோது அங்கு நடப்பதையே மறந்து விட்டாள்.) "ஹரி! ஹரி! ஹரி! என்று கிருஷ்ண பரமாத்மாவை அழைத்து எனக்கு அஞ்சற்க என்று அபயம் அளித்து (கொடுத்து) என்னைக் காப்பாற்றுவாயாக" என வேண்டுகிறாள்.

"ஹரி, ஹரி, ஹரி என்றாள்; கண்ணா1
அபய மபயமுனக் கபய மென்றாள்
கரியினுக் கருள்புரிந்தே அன்று
கலத்திடை முதலையின் உயிர் மடித்தாய்!
கரியநன் நிறமுடையாய்! - அன்று
காளிங்கன் தலைமிசை நடம்புரிந்தாய்!
பெரியதொர் பொருளா வாய! - கண்ணா!
பேசரும் பெருமறைப் பொருளாவாய்!

"அன்றொரு நாள் முதலையொன்று அங்கு குளிக்க வந்த யானையின் காலைப் பற்றிக் கொண்டது. யானை ஆதிமூலமே என்று கதறியது. அப்போது முதலையைக் கொன்று அதன் உயிரைக் காப்பாற்றினாய். ஆயிரம் தலைகளையுடைய காளிங்கன் என்னும் பாம்பின் மீது நடம் புரிந்த கரிய முகிலின் நிறத்தை உடையவனே. அளவிட முடியாத பரம்பொருளே! நான்கு

வேதங்களின் உட்பொருளானவனே! ஒருகையில் மிகச் சக்தி வாய்ந்த சக்கரத்தை உடையவனே! மற்றக்கையில் சாரங்கம் என்னும் வில்லைத் தாங்கியவனே! மந்திரங்களின் பொருளானவனே! அக்கர அடிசிலை (சர்க்கரைப் பொங்கல்) விரும்பிச் சாப்பிடும் மென்மையான அழகிய குழந்தையே! துன்பங்களைத் தீர்க்க வல்லவனே! கண்ணா! தொண்டர்களின் கண்ணீரைத் துடைப்பவனே! நல்லவர்களைக் காப்பவனே! நான்கு தலைகளையுடைய பிரமதேவனைப் படைத்தவனே!"

சக்கரமேந்தி நின்றாய் கண்ணா
சாரங்கம் என்னும் வில்லைக் கரத்துடையாய்
அச்சரப் பொருளாவாய் - கண்ணா
அக்கார அமுதுண்ணும் பசுங்குழந்தாய்!

எனப் பாஞ்சாலி கண்ணனின் பேரருளைப் பெரும் வலிமையைப் பக்தர்கள் அழைத்தவுடன் ஓடிவரும் பெருங்கருணையைச் சொல்லிச் சொல்லித் தன் துயரைத் துடைத்துவிடும்படி அழைக்கிறாள்.

வானத்துள் மேகமாக இருக்கின்றாய். நிலம், நீர், காற்று, தீ, வானம் ஆகிய ஐம்பெரும் பூதங்களில் அவையாகவே இருக்கிறாய். (உலகமே இறைவனின் இயக்கம்) உன்னை மனத்தில் இருத்தித் தவத்தில் மூழ்கியிருக்கும் முனிவர்களின் மனத்தே ஞான ஒளியாக விளங்குகிறாய். காட்டிலே இருக்கும் தடாகங்களிலே மலர்ந்திருக்கும் செந்தாமரைப் பூவில் அமர்ந்திருப்பவளும் செல்வத்தின் தலைவியுமான ஸ்ரீமகாலட்சுமி பாதங்களை வருடி அவளை மகிழ்வித்துக் கொண்டு மகிழ்ந்திருப்பவனே! (தானும் மகிழ்ந்து இலட்சுமியையும் மகிழ்விக்கிறான்) ஆதிக்கும் ஆதியானவனே! அரும் பொருளே! எமது அறிவிற்கு எட்டாதவனே! ஒளி (பிரகாசம்) வடிவானவனே! என்னுடைய வேண்டுகோளை ஏற்று அருள்புரிய வேண்டும். பூமிக்கு வானவெளி பறந்து திரியும் கருடன் மீது ஒளி வெள்ளத் திருவாய் கண்ணா! சுடர்ப்பொருளே (பிரகாசமானவனே) பெரும் சக்தி வாய்ந்தவனே.

"கம்பத்தி லுள்ளானோ - அடா!
காட்டுந்தன் கடவுளைத் தூணிடத்தே!
வம்புரை செயுமூடா" - என்று
மகன்மிசை உறுமியத் தூணுதைத்தான்
செம்பவிர் குழலுடையான்; - அந்தத்
தீயவல் லிரணிய னுடல்பிளந் தாய்!
நம்பிநின் னடிதொழு தேன்;; - என்னை
நாணழஜ யாதிங்கு காத்தருள் வாய்!

இரணியனின் மகன் பிரகலாதன் நமோ நாராயணாய நம என்ற மந்திரத்தைச் சொல்லும் போது அவன் தந்தை அப்படிச் சொல்லாதே! நமோ நாராயணாய ஜெய என்று சொல்லும்படி வற்புறுத்தி, எங்கே உன் கடவுளைக் காட்டு என்றான். அதற்கு அவன் மகன் கடவுள் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் என்று சொன்னதும், இரணியன் தூணைக் காட்டி எங்கே தூணில் எங்கே இருக்கிறான் காட்டு பார்ர்ப்போம். பயனற்ற வார்த்தை கூறும் மூடனே என்று சொல்லித் தூணை உதைத்தான். அக்கணமே சிவந்த நிறமான தலைமயிரையுடைய அந்தத் தீயவனாகிய இரணியனின் உடலைப் பிளந்து கொன்றாய். உன்னை முழுமையாக நம்பி (என்னைக் காப்பாய் என்று நம்பி உன்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். எனது மானத்தை இழக்காதிருக்கும் வண்ணம் என்னைக் காத்தருள்வாய்.

கண்ணா! வாக்கினில் வல்ல (சிறந்த) பரமசிவனைக் கூட உன் வாக்கு வல்லமையால் (சொல்லும் திறத்தால் வெல்லக் கூடியவனே! அஞ்சற்க என அபயகரம் (ஒன்றுக்கும் அஞ்சாதே நான் உன்னைக் காப்பேன் என்பதுபோல் இருக்கும் கை) காட்டிப் பக்தர்களுக்கு உறுதியளிப்பவனே! என் தந்தையைப் போல காப்பவனே! கருணைக் கடலே! (கடல் போன்ற அளவற்ற கருணை உள்ளவன்) சூரியனின் ஒளிக்கதிர் போலப் பிரகாசிக்கும் பார்வை உடையவனே! நூறு சகோதரர்கள் எனக்குச்செய்து கொண்டிருக்கும் கொடுமையிலிருந்து என்னை விடுவிப்பாயாக. கருணை மழை பொழியும் அமுதம் போன்றவனே! ஆயர் பாடியில் வசிக்கும் சிற்றிடை உடைய ஆய்ச்சியரின் வெண்ணெயை உண்கிறவனே!

நோக்கினிற் கதிருடையாய்! - இங்கு
நூற்றுவர் கொடுமையைத் தவிர்த்தருள் வாய்!

கண்ணா! இந்த உலகத்தை அநியாயத்திலிருந்து விலக்கி நீதி தவறாது காத்திடுவாயாக! மணிவண்ணா என் மனதில் ஞானச் சுடராக விளங்குபவனே! உன்னைச் சரணடைகிறேன். ஐயனே பாதக்கமலங்களே எனக்குத் துணை எனக் கூறிப் பாஞ்சாலி கண்ணனைத் துதித்துப் பலவாறாகப் போற்றி வணங்கிக் ஹரி, ஹரி ஹரி, ஹரி, ஹரி என்று கண்ணனின் திருநாமத்தை உச்சரிக்கிறாள். உடனே அங்கே ஓர் அற்புதம் நிகழ்கிறது.

நேர்மையற்ற பொய் வார்த்தைகள் சொல்பவர்களுக்கு ஏற்படும் துன்பத்தைப் போல, புண்ணியம் மேலோர்க்குக் கிடைக்கும் புகழ்போல, பெண்களின் அளவற்ற அன்புபோல (விசேஷமாகத் தாய்மார்களின் அன்புபோல) கடலில் தோன்றிக் கரையை வந்தடையும் எண்ணற்ற அலைகள் போலவும் பெண்களைப் பேணிப் போற்றும் உத்தமர்களின் செல்வம் போலவும் கூவி அழைத்தால் குரல் கொடுப்பான். கண்ணபிரான் பேரருளால் துச்சாதனன் ஆகிய முட்டாள் அன்னை திரௌபதியின் சேலையைக் கழற்றக் கழற்ற அது முடிவின்றி நீண்டு கொண்டே போனது. அவையாவும் கண்ணைக் கவரும் பல வர்ணங்களுள்ள பொற்சேலைகளாகவே இருந்தனவாம். அவற்றை எவ்வளவு நீளம் என்று அளவிட முடியாததாக இறைவன் பேரருட் சக்தி போல இருந்தது. அவையாவும் எத்தனை? எத்தனை நிறத்தன என்று சொல்லவும் முடியவில்லை. (உலகிலுள்ள அத்தனை நிறமும் அதில் அடங்கியிருக்கலாம்.) பட்டுச் சேலைகளாகவும் பொன்னிற நூல்கள் இழைக்கப்பட்டதாகவும் இருந்தன. எவரும் முன்பு காணாதவையாகப் புதுப்புது விதமானவையாகவும் காட்சி அளித்தன. அதைக்கண்ட அன்னை திரௌபதி கண்ணனின் பெருங்கருணை மழை தன் மீது பொழிந்ததைக் கண்டு மனமுருகித் தலைமீது கைகுவித்துத் துதித்தாள். அவள் சிவந்த மேனியை (உடம்பை) மேம்பட்ட ஹரிநாமம் சொல்லியதால் ஏற்பட்ட நற்பயனை உலகத்தனைவரும் உணர்ந்திடும் வகையில் இருந்தது. அந்தக் காட்சி மலைபோலக் குவிந்திருந்த சேலைகளைக் கண்டு துச்சாதனன் திடுக்கிட்டுத் தடுமாறி மயங்கி வீழ்ந்து விட்டான். அஞ்ஞான இருளில் மூழ்கி இருந்தவனுக்குச் சிறிது ஞான ஒளி தென்பட்டிருக்கலாம்.

இந்த அதிசயத்தை, அற்புதத்தைக் கண்ட தேவர்கள் பூமாரி பொழிந்தனர். “ஓம் ஜெய ஜெய பாரத சக்தி” என்று கூறியவண்ணம் வீட்டுமாச்சாரியார் மிக ஆச்சரியத்துடனும், ஆவலுடனும் கை கூப்பினார். ஏனெனில் அவர் இப்படி ஒரு நிகழ்வை எதிர்பார்த்திருக்க மாட்டார். முன்பு திரௌபதி நியாயம் கேட்டபோது சூதாட்டத்தில் பாண்டவரை வென்றதால் அவர்கள் செய்வது சரியானதே என்று நியாயம் வழங்கியவரல்லவா? அங்குள்ள வீரர்கள், கூடியிருந்தவர்கள் எல்லோரும் “ஓம் சக்தி! ஓம் சக்தி!” என்று எழுந்து நின்று கரங் கூப்பி வணங்கினர். அரச நீதியிலிருந்து விலகிச் சென்றுவிட்ட பாம்புக் கொடியுடைய துரியோதனன் தனது கொடிய செயலின் விளைவைக் கண்டு வெட்கித் தலைகுனிந்தான்.

# RUBY'S

CATERING

**020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|





**திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா**

**கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்**

**அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா**





## ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton | THISTLE HOTELS *more than just accommodating* | Holiday Inn

*உட்பட பிரபல ஹோட்டல்களில் அங்கீகாரம் பெற்ற*
*தரம்மிகு இலங்கை மற்றும்*
*தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......*

**Tel: 020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk


WESTERN
Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.. உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
SRI LANKAN FIRST JEWELLERY SHOP IN UK
Specialise in 22 ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
NO : 230
UPPER TOOTING ROAD
LONDON,
SW17 7EW
TEL : 020 8767 3445
Wembley Branch.
5 PLAZA PARADE,
29 -33 EALING ROAD,
WEMBLEY, MIDDX,
HAO 4YA
TEL : 020 8903 0909
SILK
EMPORIUM
TEL : 0208 6721 900
122 UPPER TOOTING ROAD,
LONDON, SW17 7EN.
OPENING HOURS : MON - SAT (10.30 AM - 6.30 PM). SUNDAY (11.30 AM - 6.30 PM)